உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 33 | ஆனந்த - ஐப்பசி - 10—11—74 | இதழ் 12

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

அருட் பாட்டின் ஆற்றல்

உள்ளக் கனிவும் உயர்ந்த கவிதையும் :

பாட்டுக்கள் என்பவை எப்போது எழுகின்றன? உள்ளத்தில் அளவுகடந்த உணர்ச்சி அலைகள் மோதுகின்றபோது பாட்டுக்கள் எழுகின்றன. உணர்ச்சி அலைகள் மோதி வெளிப்படுத்தவேண்டிய விருப்பம் துணைநிற்கும்போது அருமையான பாட்டுக்கள் எழுகின்றன. இயற்கையின் உந்துதலே இவ்வாறு கவிதை உருவம் பெறுகின்றது. கவிதை பாடக்கூடிய பெரியோரே சிறந்த கவிஞர் ஆவர். அத்தகு பெரியோர், தம் உளம்கனிந்தபோதெல்லாம் தம் மெய்யுணர்வுகளை அருமையான கவிதை ஆக்குகின்றனர். 'உளம் கனிந்த போதெலாம் உவந்துவந்து பாடுவன்' என வரும் சான்றோர்

திருப்பாட்டு நினைக்கத்தகுந்தது. வேர்ட்ஸ்வொர்த் என்ற மேலை நாட்டுப் பெருங் கவிஞர் 'கவிதை என்பது நிரம்பி வழிகின்ற உணர்ச்சியின் வரம்பற்ற வெளியீடே' (Spontaneous overflow of Powerful feelings) என்று பேசுகின்றார். இத்தகைய கவிதைகளே உலகை வாழ்விக்கும் உயர்நோக்கு உடையவையாக விளங்கும் என்பது உறுதி.

உலகை நெறிப்படுத்தும் உயர் நோக்கு :

பழங்காலக் கவிஞர்கள் தம் உணர்வுகளைக் கவிதையாக்கும் போது, உலகை நெறிப்படுத்தும் உயர் நோக்குடன் கவிதைகளை அருளினர். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய உறுதிப் பொருள்களை எடுத்துரைக்கும் கவிதைகளையே அருளினர். தூய உணர்வுடன் பரம்பொருளைப் பரவி வழிபடும் நிலையில், அவ்வருள் தூண்ட அப்பெரியோர் பாடிய அருட் பாட்டுக்கள் நம் தமிழ் நாட்டில் எண்ணற்றவை உள்ளன. பக்தி இலக்கியப் பாட்டுக்கள் அனைத்தும், இவ்வாறு உயர்ந்த பொருளைப்பற்றியே நம்மை ஆற்றுப்படுத்துகின்றன. 'நிறைமொழி மாந்தராக' விளங்கிய நம் நாயன்மார்களாகிய அருட்பெருங் குரவர்கள் நாட்டின் பஞ்சம் போக்கப் பாடினர்; குளிர் சுரம் நீக்கப் பாடினர்; சமுதாயப் பிணிகள் தீரப் பாடினர். சமய மறுமலர்ச்சிக்கான பிரசார நோக்குடன் – பழம்பெருஞ் சமய நெறியில் மக்கள் நின்று நிலைப்பதற்கான வழிவகைகளைக் காணும் அடிப்படையில், அறிவுறுத்தும் பாட்டுக்களை இறையருள் வழிநின்று பாடினர். இதனைத் திருத்தொண்டர் புராணம் தெளிவாக்கியுள்ளமை சைவ உலகம் அறிந்ததே.

திருவருள் தூண்ட எழுந்தவை :

"இழுமென் மொழியால் விழுமியது நுவலல்" என்பார் தொல்காப்பியர். இழுமென்னும் இனிய மென்மையான மொழிகளால், விழுமிய பொருளைப் பேசுவது பற்றி இங்குத் தொல்காப்பியர் விளக்கியுள்ளார். நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடிய அருட் பாட்டுக்கள் அனைத்தும் திருவருள் தூண்டப் பெற்ற அருட் பாட்டுக்கள். ஆதலின், அவை காலம் கடந்து நிற்கின்றன; இன்னும் பக்தியுடன் ஓதுவோர்க்குக் கண்ணீர் பெருக்கி நெஞ்சை நெகிழ்விக்கின்றன. மனமாசுகளைப் போக்கி

உள்ளத்தூயராக ஆக்குகின்றன. இவ்வாறு அவ்வருளாளர்களது அருட் பாட்டுக்கள் பெற்றுள்ள பெருந்திறனுக்குக் காரணம் யாது ?

பரம்பொருளோடு ஒன்றிய பாட்டுக்கள் :

அருளாளர்கள் தம்மை மறந்த நிலையில், பரம்பொருளோடு ஒன்றி நின்று பாடிய பாட்டுக்கள் அவை; '**அவனே தானே ஆகிய அந்நெறியில், ஏகனாகி இறைபணி நின்ற**' பெருங் கவிஞர்கள் ஆகிய அவர்களது பாட்டுக்கள் அழியாமல் நின்று நிலவுவதற்கு அடிப்படைக் காரணம் இதுவே. ஆம்; உலகம் வாழவே அவர்கள் பரம்பொருளை வேண்டிப் பாடினர்; 'என்றும் இன்பம் பெருகும் இயல்பினால், ஒன்று காதலித்துள்ளமும் ஓங்கிட' வேண்டுமென அவர்கள் பாடினர்; 'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்; வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக ஆழ்க தீயது எல்லாம்; அரன் நாமமே சூழ்க; வையகமும் துயர் தீர்கவே" என்று உலகையே – உலக நல்வாழ்வையே மனமுருகி வேண்டினர்; ஆதலின் அவற்றை இக்காலத் தன்னலப் பாட்டுக்களோடு ஒப்பிட்டெண்ணுவதே பொருந்தாத ஒன்றாகும்.

தன்னலப் பாட்டுக்கள் :

இக்காலத்துப் பாட்டுக்கள் சிறு சிறு குறிக்கோள்களைக் கொண்டு, தம்முடைய பட்டம், பதவி, பொருள் சேர்க்கும் பற்றுள்ளம் ஆகிய அடிப்படையிலேயே பாடப்பெறுகின்றன.

'பால் புளித்துப் பகலிருண்டு நால்வேத நெறிதிரியினும்' என்றும் பிறழா மயங்கிப் பிறழ்ந்தாலும் சான்றோர் மொழிகள் பிறழமாட்டா' என்று வரும் சான்றோர் திருவாக்குக்கள் மறக்கவியலாதவை.

அருளாளர் பாட்டுக்கள் அருள் மொழிகள் :

மற்றுமொரு மெய்ம்மையும் இங்கு நினைக்கத்தக்கது. அருளாளர்கள் பல்வேறு நிலைகளில், கடவுளின் வயப்பட்டு அத்திருவருள் உணர்விலேயே தோய்ந்து பாடுகின்றார்கள். 'எனதுரை தனதுரையாக' என்று திருஞானசம்பந்தர் பாடுவதும், 'என்னைக் கொண்டு தன்னைப்பாடி' என்று

நம்மாழ்வார் பாடுவதும், இந்த நோக்கிற் சிந்தித்துக்கொள்ளற் கேற்ற பொருள் நுட்பம் உடையவை. 'பாட்டுவித்தால் யாரொருவர் பாடாதாரே' என்று அப்பரடிகள் பாடுவதும் பரம்பொருளின் துணை உண்ணிற்பவே அருட் பாட்டுக்கள் எழும் அருமைப்பாட்டை விளக்குகின்றது.

புனிதப் பாட்டுக்களின் திறம் :

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பாடப்பெற்ற அருளாளர் பாட்டுக்கள் நின்று நிலைத்து, இன்றும் கற்பார்க்கு இம்மை மறுமைப் பயன்களை நல்கி நிற்கின்றன.

எவ்வளவுதூரம் மனித சமுதாயத்தை உயர்த்தமுடியுமோ அவ்வளவு தூரம் உயர்த்தி நெறிப்படுத்தும் சான்றோர் பாட்டுக்கள் எக்காலத்தும் தோன்றுவன. மற்ற கலை அடிப்படையில் தோன்றும் பாட்டுக்களும் வேண்டாம் என்பது இல்லை. இன்பக் கூத்து அடிப்படையில் அவையும் வேண்டும். ஆனால் அவை உலகியல் நெறியில் நின்று பயன் பெருக்குவனவேயன்றி அருளியல் நெறியில் பயன்பெருக்குவன அல்ல. 'அவ்வுலக' வாழ்விற்கு அடிப்படையாகமாட்டா அப்பாட்டுக்கள்.

"அருளில்லார்க்கு அவ்வுலக மில்லை பொருளில்லார்க்கு
இவ்வுலக மில்லாகி யாங்கு"

என்ற பொய்யாமொழிப்படி, பொருளும் அருளும்போல் இவ்வுலக அவ்வுலக வாழ்விற்கு ஒத்தன இவை என்று கூறுவது பொருந்தும்.

உலகம் வாழ்வதற்கென்றே பாடப்பெற்ற அருளாளர் அருட் பாட்டுக்களை அன்புலகம் ஓதி ஓதி இறையருள் பெற்று இன்புறுமாக.

சிவபோகசாரம்

அவரவருக் குள்ளபடி ஈசனரு ளாலே
அவரவரைக் கொண்டியற்று மானல்-அவரவரை
நல்லார்பொல் லாரென்று நாடுவதென் நெஞ்சமே
எல்லாம் சிவன்செயலென் றெண்.

- ஸ்ரீ குருஞானசம்பந்தர்,

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்
11—10—74 அன்று நிகழ்ந்த
அபிராமி அந்தாதி இசைத்தட்டு வெளியீட்டு விழாவில்
தருமையாதீனம் 26வது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

ஆசியுரை

"சொல்லும் பொருளும் எனநட மாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலுந் தொழுமவர்க் கேயழி யாவரசும்
செல்லுந் தவநெறி யுஞ்சிவ லோகமுஞ் சித்திக்குமே"

— அபிராமி அந்தாதி

அபிராமி பட்டர் :

இருநூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன்னர் இத் திருக்கடவூரில் ஸ்ரீ அபிராமி அம்மையின் அருளைப் பெற்றவர் அபிராமி பட்டர். இவர் செந்தண்மை பூண்ட அந்தணர் மரபில் உதித்தவர். இரவு பகல் எந்நேரமும் அபிராமி அம்மையைத் துதித்துத் தியானம் செய்து வந்தவர். அம்மையின் அருளைப் பெற்றவராகிய பட்டருக்கும் அக்காலத்திலும் துன்பம் விளைப்பதற்குச் சிலர் இல்லாமல் இல்லை. அவரது வாழ்வின் உயர்வைக்கண்டு பொறாமைகொண்ட ஒரு சில உலுத்தர்கள் அவரைப்பற்றித் தவறான முறையில் தூற்றிவந்தனர். அல்லனவற்றை அகற்றி நல்லனவற்றையே நாடி வாழ்ந்துவந்த அபிராமிபட்டர், இவர்களுடைய ஏச்சையும் பேச்சையும் பொருட்படுத்தாது அபிராமியின் பேரருளிலேயே திளைத்திருந்தார். நல்லோர் உள்ளத்தை நடுங்கச் செய்வதையே நாட்டமாகக் கொண்ட அக்கயவர்கட்கு ஒரு சந்தர்ப்பம் வந்தது.

அபிராமி அந்தாதி :

ஒரு தைமாத அமாவாசையின்போது தஞ்சை சரபோஜி மன்னன், காவிரிப்பூம்பட்டினத்தில் கடலாடி கடவூர்ப் பெருமானைத் தரிசிக்க இத்தலத்திற்கு வந்தான். அப்பொழுது அபிராமிபட்டரைக் குடிகாரர் என்றும், தகாதசெயலுடையவர் என்றும் பலவாறாக அரசனிடம் குறை கூறினர். முறைசெய்து காக்கும் அம்மன்னன் பட்டரின் நிலையைப் புரிந்துகொள்வதற்கு, இன்றைய திதி என்ன என்று கேட்டான். அபிராமி அன்னையின் அருள் ஒளியிலேயே மூழ்கிக்கிடந்த அபிராமிபட்டர் இன்று பௌர்ணமி என்றார். துன்மதியினர் கூறியது உண்மையே என்று கருதினான் மன்னன். இன்று பௌர்ணமி திதி என்று கூறிய தாங்கள், எனக்கு இன்று மாலை முழுநிலவைக் காட்ட முடியுமா? என்று கேட்டான் மன்னவன்; பட்டரும் காட்டுகிறேன் என்றார்.

அதுவரை அபிராமி அம்மையின் அருள் வெள்ளத்தில் மூழ்கியிருந்தபட்டர், நிகழ்ந்ததை உணர்ந்து, கேட்டவனோ மன்னன்; இன்றோ அமாவாசை; பௌர்ணமி என்று சொல்லி விட்டோம் என்பவற்றை உணர்ந்தார். நாமாகச் சொல்லவில்லை; அம்மையின் அருள்வழியே சொல்லியிருக்கிறோம். எனவே அம்மையிடத்திலேயே இந்தக் குறைகளை முறையிடுவோம் என்று எண்ணினார். அம்மையின் அருள்தான் இவ்வாறு சொல்ல வைத்தது. எனவே அம்மையிடமே பாரத்தைப் போடுவேன் என்ற எண்ணம் உடையவராய் அபிராமி அம்மைமீது அந்தாதி பாடத் தொடங்கினார்.

அபிராமியின் அருள் :

எழுபத்தொன்பதாவது பாடலாகிய **"விழிக்கே அருளுண்டு"** என்ற பாடலைப் பட்டர் பாடியபோது அம்மை தம்முடைய தோட்டைக்கழற்றி வானமண்டலத்திலே வீசி நிலவொளி வீசச் செய்தாள். அபிராமிபட்டரின் பண்பாட்டையும் பத்திமையையும் அம்மை அருள்பெற்ற சிறப்பையும் உணர்ந்த மன்னன் அவரை வழிபட்டான்; அபிராமிபட்டருக்கு வேலிக்கு ஒரு மரக்கால் நெல் கொடுக்கச் சொல்லிச் சென்றான் மன்னன். சமீப காலம்வரையில் அதனை அவர் மரபினர் வாங்கி வந்தனர். சான்றாகச் செப்புப்பட்டயங்களும் உண்டு. இத்தகைய அருள்

பாடல்களை (விநாயகர் காப்பு, நூற்பயன் இவற்றுடன் 102 பாடல்களை) இசைத்தட்டில் உருவாக்கி, நல்ல இசையில் கொடுத்திருக்கிறார்கள்.

அருள் தொண்டு :

அபிராமி அந்தாதிப் பாடல்களை நமது ஆதீன இசைப் புலவர், சீகாழி கோவிந்தராஜன் நல்லபல இராகங்களில் இசைத்து இசைத்தட்டில் அமைத்திருக்கிறார். அந்த இசைத் தட்டுகளை அபிராமி சந்நிதானத்தில் வெளியிட வேண்டும் என்ற நல்ல உள்ளத்தோடு, வெளியீட்டு விழாவை இங்கே அமைக்கச் செய்திருக்கிறார். இந்த அருட்பாடலை நல்ல உள்ளம் படைத்த வரும் வாழ்க்கையில் பக்திப் பண்பாடும் நல்லொழுக்கமும் அடக்கமும் உடைய இவர் பாடியிருப்பது பாராட்டிற்குரியதாகும்.

நல்லதொண்டு :

இதனை, A. V. மெய்யப்பச் செட்டியாரும், கிராமபோன் கம்பெனியாரும் இசைத்தட்டில் பதிவுசெய்து வெளியிட் டுள்ளார்கள். சாதாரணமாக அன்றாட வாழ்வில் சிறிது மகிழ்ச்சியைத்தரும் கேளிக்கைப் பாடல்களையும் சினிமாப் பாடல்களையுமே பெரும்பொருட் செலவுசெய்து வெளியிட்டுவரும் இக்காலத்தில் நிலையான வாழ்க்கைக்கு – அமைதியான வாழ்க்கைக்கு இனிய நெறியில் அழைத்துச் செல்லும் இப் பாடல்களைத் தைரியமாக வெளியிடவந்த இவர்களைத் தமிழுலகம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. நாட்டுக்கோட்டை நகரத் தார்கள் கற்கோயில் கட்டிக் கடவுள் அருளைப் பெருக்கியவர்கள். அம்மரபில் வந்த A. V. M. செட்டியார் இதுவரை சினிமாத் துறையிலேயே இருந்தபோதிலும், அருளாளர்களின் சொற் கோயிலைப் புதுப்பிக்கும் பணியில் ஈடுபட்டிருப்பது போற்றத்தக்க பொருத்தமாகும்.

அருள் மருள் வேறுபாடு :

சாதாரண மனிதன் பாடுகின்ற பாட்டிற்கும் பேச்சிற்கும் அருளாளர்கள் பாடுகின்ற பாட்டிற்கும் பேச்சிற்கும் நிரம்ப வேறுபாடு உண்டு. அருளாளர்கள் பொன்னையும் பொருளையும் புகழையும் பெறவேண்டிப்பாடியவர்கள் இல்லை. இந்த லட்சியத்தில் பாடப்பெற்ற பாடல்களுக்கு, ஆயுள் நிறைய உண்டு. சாதாரண

மனிதர்கள் பொன்னையும் பொருளையும் புகழையும் நோக்கமாகக் கொண்டு பாடுபவர்கள். அப்பாடல்கட்கு ஆயுள் நீடிப்பதில்லை. உதாரணமாக, சினிமாப் பாட்டுக்களை எடுத்துக்கொள்ளுங்கள். பெரும்பாலும் சீசன் பாட்டுக்களாக – அதாவது ஒரு குறிப்பிட்ட காலம் மக்களைக் கவர்ந்து அவர்கள் மனதில் தங்குகின்றனவாக உள்ளனவேயன்றி, அவை நிலைத்து நிற்பதில்லை. இப்படிச் சொல்வதால் சினிமா, கேளிக்கைப் பாடல்கள் பயனற்றன என்பது பொருளல்ல. அருளாளர் பாடல்களைப்போல நிலைத்த பெரும்பயன் அளிப்பதில்லை என்பதையே கருத்தாகக் கொள்ளவேண்டும். எல்லோருக்கும் புரியும் என்பதற்காகவே சினிமாப் பாடல்களைக் குறிப்பிடுகிறோம். இதனால் அத்துறையைக் குறை கூறுவதாகக் கொள்ளக்கூடாது. சுருங்கச் சொன்னால் அன்றாட வாழ்வில் சிறு பொழுது சுவை நலம் பயப்பது சாதாரண மனிதர்களின் பாடல்கள். என்றுமே சுவை பயந்து உடலையும் உயிரையும் பாதுகாப்பது அருளாளர்களின் பாடல்கள்.

அருள் பாடல்கள் :

தேவார திருவாசக இதிகாச புராணங்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் நிலைத்து நிற்கின்றன. காரணம் பாடியவர்கள் தன்னலம் சிறிதுமின்றிப் பாடியதேயாகும். இங்கே அபிராமி பட்டர் தனக்கு ஆற்றொணாப் பெருந்துன்பம் வந்தபோதும் 'என் துன்பத்தை நீக்கிவிடு' என்று கேட்கவில்லை. இந்நிலை நம்மனோர்க்கு எளிதில் வருவதில்லை. இதுதான் நமக்கும் அருளாளர்க்கும் உள்ள வேறுபாடு.

> "நன்றே வருகினும் தீதே விளைகினும் நானறிவது
> ஒன்றேயுமில்லை உனக்கே பரம்"

என்ற உறைப்புடைய பாடல்களை அருளிய அபிராமிபட்டரைப் போன்ற பெரியவர்கள் பாடல்கள் என்றும் நிலைத்து நிற்கும்.

பண்பின் பெருமை :

உலகம் இயங்குவதும் நாடு செழிப்பதும் அருளாளர்களால் தான். அவர்களைப் பண்புடையார் என்று குறிப்பிடுகின்றார் திருவள்ளுவர். அவர்கள் அதிகம் பேர் இல்லையாயினும் ஒருசிலர் இருந்தாலே அந்த உலகம் உய்யும். அவர்கள் இல்லையாயின் அந்த உலகம் சீரழிந்து சிதைந்து மண்ணோடு மண்ணாய் மறைந்துவிடும்.

"பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

என்பது திருவள்ளுவர் வாக்கு.

தனக்கென முயலாது பிறர்க்கெனவே முயல்பவர்கள்தான் பண்புடையாளர்கள். அவர்கள் இந்த நில உலகத்தில் இருப்பதால்தான் உலகம் நிலைத்திருக்கிறது என்கிறார் புறநானூற்றுப் புலவர்.

"உண்டாலம்ம இவ்வுலகம்
....
தனக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே"

அருள் வல்லமை:

அத்தகைய அருளாளர்கள் தமக்கு இன்பம் வந்த போதும் துன்பம் வந்தபோதும் அவற்றைச் சமமாகக் கருதும் அருள் வல்லமை உடையவர்கள். அவர்கள் இறைவனை வேண்டும்போது தமக்கென ஒன்றையும் வேண்டுதல் செய்யாது அவன் திருவடிகளில் என்றும் நீங்காத அன்பையே வேண்டி நின்றனர். இதனை முருகப் பெருமானின் அருள் பெற்ற பரிபாடல் ஆசிரியர் ஒருவர்,

"யாஅம் இரப்பவை,
பொன்னும் பொருளும் போகமும் அன்று; நின்பால்
அன்பும் அறனும் அருளும் மூன்றும்
உருள்இணர் கடம்பின் ஒலிதாரோயே"

என்று வேண்டி நிற்பது இதனை உறுதிப்படுத்தும்.

அருளாளர் சொல்லின் பயன்:

இவர்கள் பொன்னையும் பொருளையும் புகழையும் விரும்பாத நிலைக்குத் தம்மை உயர்த்திக்கொண்டவர்கள். அருளை – அன்பை விரும்பி வாழ்பவர்கள். எனவே இவர்களுக்கு நல்லன வந்தால் மகிழ்ச்சியில்லை. தீயன வந்தால் வருந்துவதும் இல்லை. இப்படிப் பட்ட அருளாளர்களைத்தான் பண்புடையவர்கள் என்கிறோம். அவர்கள் அருளிக் கூறினும் வெகுளிக் கூறினும் அவ்வச் சொற்கள் அவ்வப் பயனைத் தந்தே விடும்.

இசைத்தட்டு வெளியீடு:

அபிராமி பட்டருக்கு வந்த துன்பத்தை மாற்றி அருள் விளக்கம் செய்த அபிராமி அந்தாதியை நாடு முழுவதும் இசைத் தட்டு மூலமாக ஒலி பரப்புவது இந்தக் காலத்திற்கு மிகவும் ஏற்றதாகும். காரணம் அபிராமிபட்டருக்கு வந்த சூழ்நிலை தற்போது நாட்டு மக்கள் அனைவருக்கும் வந்திருப்பதேயாகும். எனவே இந்த அபிராமி அந்தாதியை நாளும் ஓதினால் – இந்த ஒலி நாடு முழுவதும் பரவுமாறு செய்தால், நமது நாட்டைச் சூழ்ந்திருக்கும் துன்பச் சூழ்நிலை அகலும். இன்பச் சூழ்நிலை உருவாகும் என்பது உறுதி. இப்பணியில் பங்குபற்றிய பக்தர்கள் அனைவருக்கும் அபிராமி அன்னையின் திருவருள் என்றும் பெருக, செந்தமிழ்ச் சொக்கன் திருவடிமலர்களைச் சிந்தித்து இவ் இசைத்தட்டை வெளியிடுகிறோம்.

வாழ்க வையகம்!

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில் கால்கோடி அருச்சனை நிறைவு விழா

—o—

9—11—74 சனிக்கிழமை திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 26-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஞானபீடம் அமர்ந்த திருநாள். அன்று தருமையாதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஜீவசமாதி கூடிய திருக்கோயிலாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில், ஸ்ரீ ஞானம்பிகைக்கும் ஸ்ரீஞானபுரீசுவர ருக்கும் நிகழ்ந்துவரும் கோடி அருச்சனையில் கால்கோடி அருச்சனை நிறைவு விழா, விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. கால்கோடி அருச்சனை நிறைவாக ஸ்ரீ ஞானபுரீசுவரருக்குப் பஞ்சமுகார்ச் சனையும் ஸ்ரீ ஞானம்பிகைக்கு நவசக்தியருச்சனையும் நிகழ்த்தப் பெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி சிறப்பு வழிபாடாற்றினர் கள். சைவமெய்யன்பர்கள் பலர் வந்து வழிபட்டும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களைத் தரிசித்தும் திருவருளும் குருவருளும் பெற்றுய்ந்தனர்.

சிவஞானசித்தியார் தெளிபொருள் விளக்கம்

தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைமணி
திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

[மலர் 33, இதழ் 11, பக்கம் 555 இன் தொடர்ச்சி]

அறிவு டற்குண மென்னில் ஆனைய
தாதி அந்தம் எறும்பதாம்
உறும்உ டற்பெரி தான வற்றில்
உதித்தி டும்பெரி தாகவே;
சிறுவு டற்செறி ஞான மும்சிறி
தாயி டும்; பரி ணாமமும்
பெறும்; உ டற்சிறி தாவ தென்பெரி
தாவ தென்சில பேசிடே. 43

இதன் தெளிபொருள்

'அறிவு உடம்பின் பெற்றியே; வேறன்று' என்றால், மிகப் பெரிய உடம்பாயுள்ளது யானை; மிகச் சிறிய உடம்பாயுள்ளது எறும்பு. (ஏனைய உடம்புகள் இவற்றிற்கு இடைப்பட்டன.) இவைகளில் நிகழும் அறிவுகளும் அவ்வவ் வுடம்பின் பெருமை சிறுமைகளுக்கு ஏற்பப் பெரியனவாயும், சிறியனவாயும் நிகழ வேண்டும். (அவ்வாறின்றிச் சிறிய உடம்பாய் உள்ளனவற்றில் பெரியனவும், பெரிய உடம்பாய் உள்ளனவற்றில் சிறியனவுமாய் அறிவு மாறி நிகழவும் காண்கின்றோம்.) மேலும், உடம்புகள் அனைத்தும் பரிணாமமே ஆகையால், 'அவற்றின் பெற்றியே அறிவு' என்றால், அறிவும் பரிணாமத்தை எய்துவதாகும். (அறிவு பரிணாமத்தை எய்துதல் இல்லை. 'மெல்ல மெல்ல வேட்டுவனாய்ப் பரிணமித்த புழு, எஞ்ஞான்றும் மீள வேட்டுவ னாகாதது போலப் பரிணாமத்தை எய்தும்பொருள் மெல்ல மெல்ல ஒன்றுமற்றொன்றாய்ப் பரிணமித்தபின், பின்னை நிலையை விட்டு முன்னை நிலையை எஞ்ஞான்றும் மீள அடைதல் இல்லை. அறிவு, தான் நினைந்ததை

விரைய மறந்தும், மறந்ததை முன்போலவே விரைய நினைந்தும் நிற்றலால், கறங்கின் (காற்றாடியின்) ஓலைபோலக் கீழும், மேலுமாய் விரையச் சுழலும் பொருளாவதன்றிப் பரிணமிக்கும் பொருள் அன்று' என்பது கருத்து.) அது நிற்க.

உடம்புகள் யாவும் ஓர் அளவினவாயிராது, பல்வேறு அளவினவாய் இருத்தற்குக் காரணம் என்னை?

விளக்கம்

'அறிவுக்குக் கருவியாய் அமைந்ததே உடம்பு. அதனால், அறிவின் திறங்கள்தாம் பலவாகலின், அவ்வவ் அறிவிற்கு வேண்டும் அளவினவாய் உடம்புகள் அமைந்தன. ஆகையால், கருத்தாவாய் உள்ள அறிவைக் கருவியாய் நிற்கும் உடம்பின் பெற்றியாகக் கூறுதல் அடாது' என்பது, இறுதிக்கண் போந்த வினவால் பெறப்படும் குறிப்பு. "ஆனையது" என்பதில் அது, பகுதிப் பொருள் விகுதி. 'பெரிதானவற்றில்' என்பதில் 'பெரிது' என்பது பன்மை யொருமை மயக்கம். 11

போத மும்மெலி வாகி யும்மலி
பூத மானவை கூடலிற்
பேத மோடு பெருத்து டற்கண்
சிறுத்த பெற்றிமை யென்றிடின்
ஓது டற்பெரி தான வுஞ்சிறி
தாயி டா; சிறி தானவும்
நீதி யிற்பெரி தாயி டா; முன
முள்ள தன்மையின் நீடுமே. 44

இதன் தெளிபொருள்

'எல்லாத் தன்மைகளையும் நிரம்பவுடைய பூதங்கள், தாம் கூடும்பொழுது (அத்தன்மைகள் பலவும் நிரம்பி நிற்கும் முறையிற் கூடாமல், சில குறையும் முறையிற் கூடலும் உளதாகலின், அவ்வாற்றால் அவை பிற பொருள் மிக, அறிவு குறையக் கூடுதலால் உடம்புகள் பெரியவாய வழியும், அறிவு சிறியவாகின்றன, என்று நீ கூறினல்,

அந்நிலை சிலபொழுது நிகழ்ந்து, சிலபொழுது நிகழாதொழியாது, எஞ்ஞான்றும் ஒரு பெற்றியாகவே நியதியாய் நிகழக் காண்டலின், – அஃதாவது பெரிய உடம்புடைய உயிர்கள் எஞ்ஞான்றும் பெரிய உடம்புடையனவாயும், சிறிய உடம்புடைய உயிர்கள் எஞ்ஞான்றும் சிறிய உடம்புடையனவாயுமே தோன்ற, அவற்றது அறிவும் எஞ்ஞான்றும் ஒரு பெற்றியவாகவே விளங்கக் காண்டலின் – அறிவின் நிலை, பூதங்கள் தம்மிற் கூடும் முறையால் ஆவன என்றல் பொருந்துவதன்று.

விளக்கம்

'அறிவற்ற சடப்பொருள்' என்று உலகாயதராலும் உடன்பட்ட பூதங்கள், சிலபொழுது அறிவு பெரிதாமாறும், சிலபொழுது அறிவு சிறிதாமாறும் கூடவேண்டும் எனக் கருதிக் கூடுமாறில்லை. மேலும் அவை அங்ஙனம் கருதுதற்குக் காரணமும் இல்லை. ஆதலால் அவ்வவ் வுடம்பில் எஞ்ஞான்றும் ஒரு பெற்றியாகவே நிகழும் அறிவிற்குப் பூதங்கள் கூடும் முறைமையே காரணம் என்றல் பொருந்தாது' என்பது கருத்து. 12

இயல்பு காண்இவை யென்னின், வேறிசை
பெண்ணொ டாண்இரு தன்மையாம்
செயல்கொ ளா; இவர் செய்தி காரண
மாக வந்து செனிப்பதென்?
இயல்ப தாம்உடல் பூத காரிய
மாவ தும்மிலை யாகுமால்;
மயல தாம்வினை யால்ஒ ருத்தன்
வகுத்த தன்மையின் வந்ததே. 45

இதன் தெளிபொருள்

இனி நீ, 'உடம்புகளும், அறிவும் பெரியவாயும், சிறியவாயும் தோன்றுதல் இயல்பேயன்றி இவற்றிற்கு ஒரு காரணம் இல்லை' எனக் கூறினல், எல்லா உடம்புகளும் ஆண்மை, பெண்மை என்னும் இரு தன்மைகள் தம்மிற் கூடுதலைத் தம் தோற்றத்திற்குக் காரணமாக அவாவ வேண்டுவதில்லை. அவ்வாறின்றி, ஒருவன்' ஒருத்தி என்னும் முறையில் இருவர் கூடும் கூட்டத்தை நியதி காரணமாகக் கொண்டே உடம்புகள் பிறப்பதால், அவ்விருவரது

கூட்டம் காரணமாகத் தோன்றும் செயற்கையாகிய உடம்பை இயற்கை என்றல் அறியாமையாம். மேலும், உடம்புகளை இயற்கைப் பொருள் என்றல், அவற்றைப் 'பூதங்களின் காரியம்' என்ற உனது கொள்கைக்கே முரணாகும். அதனால் அவை இயற்கை யல்ல. ஒருவனாகிய கடவுள் அவ்வவ்வுயிரின் வினைக்கு ஏற்ப அவற்றிற்கு ஆக்கி அளித்த செயற்கைப் பொருளே உடம்புகள்.

விளக்கம்

'இவர்' எனச் சிறப்புடைய உயர்திணை மேல் வைத்துக் கூறினராயினும், அஃறிணைக்கும் அது பொதுவாதல், முன்னர், 'பெண், ஆண்' எனப் பொதுப்படக் கூறியதனால் பெறப்படும். உடம்பிற்குக் கூறிய நயத்தானே அறிவின் சிறுமை பெருமை கட்கும் காரணம்உண்மை பெறப்படும் என்பதாம். "நீரின் வந்தெழு கொப்புள்" என்பது முதலாக இதுகாறும் எட்டுச் செய்யுட்களால், "புத்தி குணம் நற்பொறி புலன்கள் இவை யெல்லாம் நீரினில் எழுங்குமிழிபோல உடம்பின் குணமேயாம்" எனக் கொண்டு (15) "இப்படியன்றி உயிர் வேறு உண்டென்று செப்புதல் என்னே" (17) என அவர் கூறியதைச் சிறப்பு வகையான் எடுத்துக் கொண்டு பலவாற்றான் மறுத்தார். 13

காரணம்அவை என்ற தென்னை?
    கடாதி போல்நிகழ் காரியம்
நேர ணைந்து சமைந்து நின்றிடும்
    என்ப தும்மது நேர்கிலோம்;
போர ணைந்திடும் ஒன்றொ டொன்று
    பொருந்து மாயின் வருந்தியும்
நீர ணைந்தொரு தீயில் நின்றது
    கண்ட தாயின் நிகழ்த்திடே. 46

இதன் தெளிபொருள்

இனி நீ, 'உடம்புகள் செயற்கையாய்க் காரணம் உடையனவே எனினும், அவற்றிற்குப் பூதங்களே காரணம்; பிறிது காரணம் கொள்ளுதல் மிகையாம்' என்று கூறுதல் பொருந்தாது. ஏனெனில், குடம் முதலிய காரியங்கள் குலாலன் முதலிய செய்வோரையின்றி, மண் முதலிய காரணங்களினின்று தாமே தோன்றாமை முன்பே (37) காட்டினோம்.

மேலும், பூதங்கள் ஒரு தன்மையவன்றி, மாறுபட்ட வேறு வேறு தன்மைகளை உடையன. (ஆகாயம் அருவம்; ஏனைய உருவம். நீர் காப்பது; தீ அழிப்பது மற்றும் இன்னோரன்னவை பல.) ஆதலின், மாறுபட்ட பல பொருள்கள் தம்முள் இயல்பாய் ஒன்றி நிற்றல் ஒரு ஞான்றும் கூடாது. கூடும் எனின், நீரும் தீயும் எவ்வாற்றாலேனும் இயல்பாய் ஒன்றி நிற்றலைக் காட்டல் வேண்டும். அதனால் பூதங்கள் தம்முள் இயைந்து உடம்புகளைத் தோற்றுவித்தற்கு அவற்றை அங்ஙனம் வலிதின் இயைவிக்கின்ற ஒருவன் வேண்டும். ஆதலின், அவனை மிகை எனக் கூறுதல் எவ்வாறு?

விளக்கம்

இறுதியில் தந்துரைத்தன குறிப்பெச்சம். "போர் அணைந்திடும்" என்றது, 'மாறுபட்ட தன்மைகளைக்கொண்டு நின்றிடும்' என்றவாறு. 14

பூதம் மேவு புணர்ச்சி யேபுரி
காய காரணம் ஆகுமேல்
காதல் ஆணொடு பெண்ணும் மேவு
புணர்ச்சி காரணம் ஆவதென்?
ஆதி யேஉல கத்தில் ஆணொடு
பெண்ணு மாய்அணை காரியம்
நாதன் நாயகி யோடு கூடி
நயந்த காரணம் என்பரே. 47

இதன் தெளிபொருள்

'பூதங்கள் தம்மிற் கூடுதல் ஒன்றே உடம்பின் தோற்றத்திற்குக் காரணம்' என்றல் பொருந்தாமை, அத்தோற்றத்திற்கு ஆண் பெண் புணர்ச்சி நியத காரணமாய் இருத்தல் பற்றிச் சிற்றறிவினர்க்கும் புலனாகும். அது நிற்க, "உடம்பின் தோற்றத்திற்கு அப்புணர்ச்சியை நியத காரணமாய் இறைவன் அமைத்து வைத்தமை, உலகம் 'சிவமும், சத்தியும்' என இருதிறப்பட்டு இயைந்து நிற்கும் தன்மையே முதலாக உடையது என்பதனை அறிவித்தற்கே" என மெய்யுணர்ந்தோர் கூறுவர். அவர் கூற்றினைத் தெளிதற்கு உன்னால் இயலாது.

விளக்கம்

'ஆயினும், சமையம் வாய்த்துழி அதனை உணர்த்திப்போதல் எம்மனோர்க்குக் கடமை' என்பது கருத்து. இறுதியில் தந்துரைத்தது குறிப்பெச்சம். "ஆணொடு பெண்ணும் மேவு புணர்ச்சி காரணம் ஆவதென்" என்றது, இதனைத்தானும் நினையாது, உடம்புகட்குப் பூதங்களன்றிப் பிறிது காரணம் மிகை' என்பாரது அறியாமை மிகுதியைப் புலப்படுத்தற்கு. ஆதியே – முதற்றொட்டே,

"சத்தியும் சிவமும் ஆய
தன்மைஇவ் வுலகம் எல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும்
உயர்குண குறியு மாகி
வைத்தனன்"

என்னும் சுபக்கச் செய்யுளையும்,

"யாதேனும் காரணத்தால் எவ்வுலகில் எத்திறமும்
மாதேயும் பாகன் இலச்சினையே"

என்னும் **திருக்களிற்றுப்படியாரையும்** இச்செய்யுளின் பிற்பகுதியோடு வைத்து நோக்குக. இதனானே, **"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"** (கொன்றை வேந்தன் – 1) என்ற ஔவையார் வாக்கிற்கும் நீதி கூறுதலேயன்றி, இத் தத்துவத்தை யுணர்த்துதலும் கருத்தாதல் அறியப்படும்.

இவை இரண்டு செய்யுளாலும் "இறை வேறு உண்டு என்று செப்புதல் என்னே" என (17) அவர் கூறியதை மறுத்தார். 15

தொடரும்......

சிவபோகசாரம்

"அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்
அவரவர் வினைவழி அவரவர் அனுபவம்
எவரெவர்க் குதவினர் எவரெவர்க் குதவிலர்
தவரவர் நினைவது தமைஉணர் வதுவே"

– ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

தமிழ்ச் சொற்களில் தத்துவம்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. ந.ரா. முருகவேள், M. A., M. O. L.,

" மெய்யேஉன் பொன் அடிகள் கண்டு இன்று விடுஉற்றேன் "

" விடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன் ".

— திருவாசகம்.

முன்னுரை :

மொழியும் பண்பும், ஒரு நாட்டினது மக்களின் விழுமிய செல்வங்களாகும். நாட்டிற்கு விழுப்பம் விளைவிக்கும் அவை இரண்டினையும் உயிரினும் மேம்பட்டனவாக மதித்துப் போற்றுதல் வேண்டும். " நிலத்திற் கிடந்தமை கால் காட்டும், காட்டும் குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல் " என்னும் பொய்யாமொழிக் கிணங்க, ஒரு தனி மனிதனின் பண்பினை, அவன்றன் வாய் மொழியின் வைத்து நாம் உணர்ந்து கொள்ளுதல் கூடும் அங்ஙனமே, ஒரு நாட்டு மக்களின் பண்பாட்டினையும், மனப் பான்மையினையும், அவர்தம் மொழியின் இயல்பும் அமைப்பும் கொண்டு, நாம் ஆராய்ந்து கொள்ளலாம்.

சொல்லின் உயர்வு :

" சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே " எனப் பாடினார் பாரதியார். உலகில் ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு இயல்பு உண்டு என அறிஞர்கள் கூறுவர். அம்முறையில், தமிழ் மொழிக்கும் தத்துவ உணர்வுக்கும் மிகமிக நெருங்கிய தொடர்பு காணப் படுகின்றது. எழுத்துக்களுக்கு உயிர் எழுத்து – மெய் எழுத்து – உயிர் மெய் எழுத்து எனப் பெயர்கள் அமைத்து வழங்கியதும், பிற மொழிகளிற் போலச் சொற்களைச் சொல் நோக்காது பொருள் நோக்கி உயர்திணை அஃறிணை, ஆண்பால் பெண்பால் எனப் பாகுபாடு வகுத்ததும், பிறவும், தமிழ் இலக்கணத்தின் தனிப்பெரும் சிறப்புக்களாக விளங்குகின்றன. (Dr. Caldwell)

சென்னைத் தியாகராயநகர்த் தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் நடைபெற்றுவரும் திருவாசக வகுப்பில் நிகழ்த்திய விளக்கங்களைத் தொகுத்து எழுதியது.

தமிழிலுள்ள எல்லாச் சொற்களும் ஆழ்ந்த பொருட் குறிப்பு உடையனவாகவே அமைக்கப்பெற்றுள்ளன. "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்பது தொல்காப்பிய நூற்பா. ஆதலின், பிறமொழிகளிற் போலக் காரணமின்றியும், பொருள் குறியாமலும், இடுகுறியாக மாத்திரம் வரும் சொற்கள் எதுவும், தமிழில் இல்லை என்பது புலனாகின்றது. புலமையுடையவர்கள் ஆராய்ந்து காணும்பொழுது, தமிழ்ச் சொற்கள் பற்பல அரிய சிறந்த உண்மைகளை, உணர்த்த வல்லனவாகத் திகழ்கின்றன.

நுண்பொருட் சொற்கள் :

கடவுள் இறைவன் இயவுள் உலகு வையம் நிலம் தரை உடல் உயிர் தவம் ஒழுக்கம் கற்பு முதலிய சொற்களில், செறிந்துள்ள திட்ப நுட்பம் சான்ற கருத்துக்கள், பழந்தமிழ் மக்களின் அறிவறிந்த பண்பினையும், உயர்வற உயர்ந்த நாகரிகச் சிறப்பினையும், உள்ளவாறு உணர்தற்குப் போதிய சான்றுகளாக மிளிர்கின்றன.

எல்லாவற்றையும் கடந்து நிற்பவன்; எல்லாவற்றையும் உள்ளிருந்து கடாவி (செலுத்தி) நடாத்துபவன் கடவுள். எல்லாப் பொருள்களிலும் தான் தங்கியிருப்பவன்; எல்லாப் பொருள்களும் தன்பால் தங்க இருப்பவன் இறைவன். தான் இயங்காமல் தனி நின்று, எல்லாப் பொருள்களின் உள்ளும் இருந்து இயக்குபவன் இயவுள். எல்லா உயிர்களும் உலவுதற்கு இடமாக இருப்பது; என்றேனும் ஒரு காலத்தில் அழிந்துபடத் தக்கது உலகம். எல்லாப் பொருள்களையும் வைக்குமிடமாக விளங்குவது வையம். அனைவரும் அனைத்தும் நிற்பதற்குரிய இடம் நிலம். எல்லாவற்றையும் தரிப்பது (தாங்குவது) தரை. அவ்வப்போது மாறுபட்டு நிற்பது உடல். (உடலுதல் - மாறுபடுதல்). மூச்சு விடுதலாகிய உயிர்த்தலைச் செய்வது; இறைவனை அறிந்து வழிபட்டு உய்வதற்கு உரியது உயிர். தீய பண்புகள் அழிந்து (தபுதல் - அழிதல்) நற்பண்புகள் ஓங்கி மிகுவது (தவ - மிகல்) தவம். முன்னெறிபின் முறைனாலும் ஒழுங்குபட்ட வாழ்க்கை ஒழுக்கம். கல்லைப்போலும் அன்பின் திண்மை; தாய் தந்தையரும் சான்றோரும் அறநூல்களும் கற்பிக்கும் நெறியில் ஒழுகும் தன்மை கற்பு.

இத்தகைய சொற்பொருள் நலங்கள் பலவற்றையும் கருதுங்கால், இச்சிறந்த சொற்களைப் படைத்து வழங்கிய நம் தமிழ் முன்னோர்களின் பண்பாடும் நாகரிகமும் நன்கினிது புலனாகின்றன.

சிதம்பர சுவாமிகள் :

தமிழகச் சமய உலகில், திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் அவர்களை, அறிஞர் அனைவரும் நன்கினிது அறிவர். ஏறத்தாழ முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னே விளங்கியிருந்த தமிழ்ப் பெருஞ் சான்றோர் அவர். அவர் இயற்றிய "திருப்போரூர்ச் சந்நிதிமுறை" என்னும் நூல், சமய உலகில் பெரும் புகழ் வாய்ந்த அருட்பெறல் துதி நூல்; வடலூர் இராமலிங்க அடிகளாரால் பெரிதும் மதித்துப் போற்றப் பெற்றவர் சிதம்பர சுவாமிகள் எனின், அவர்தம் அருமை பெருமைகளை நாம் என்னென்று புகழ்ந்துரைப்பது?

அத்தகைய பெருஞ் சிறப்பினராகிய சிதம்பர சுவாமிகள், திருப்போரூர்க்கு அணித்தேயுள்ள திருக்கழுக்குன்றம் வேதகிரீசுவரப் பெருமான் மீது பாடிய பதிகம் ஒன்றில், ஒரு பாடலின் வாயிலாக, அமிழ்தினும் இனிய நமது தமிழ்மொழியின் தத்துவ அடிப்படை உணர்வு நலத்தினை, அழகுற விளக்கியருள்கின்றார்.

"வீடு" என்னும் சொல் யாவரும் அறிந்தது; யாவரும் வழங்குவது. மிகவும் எளிய சிறந்த இந்தச்சொல், தத்துவ நூற் கருத்துக்களையெல்லாம் தன்கண் சுருக்கமாகத் தொகுத்துப் பொதிந்துகொண்டு, திகழ்தலை ஓர்ந்து உணர்ந்து வியக்கின்றார் சிதம்பர சுவாமிகள்.

சொல்லில் தத்துவம் :

"வீடு" என்னும் சொற்குப் பொருள் விடுதலை (முத்தி). 'வீடு" என்ற சொற்பொருட் குறிப்பினாலேயே, கட்டுண்டிருந்த நிலை (பெத்தம்) புலனாகின்றது. அதனால் கட்டுண்டவனும், கட்டியிருப்பதும் ஆகிய பொருள்கள் உண்டு என்றும், தெளிவாகத் தெரிகின்றது. கட்டுண்டவன் பசு; கட்டியிருப்பது பாசம். கட்டு ஆகிய கயிறு, அறிவில்லாத சடப் பொருள்; கட்டப்பட்டவனோ. தனக்கென உரிமை இல்லாதவன் (அசுதந்திரன்). எனவே, கட்டியுள்ள கயிற்றை அவிழ்த்துக் கட்டப்பட்டிருப்பவனை விடுவிப்பவன் ஒருவன் உளனாதல் வேண்டும். அவனே எல்லா அறிவும் எல்லா ஆற்றலுமுடைய பதி (தலைவன்) ஆவான். கட்டுண்டவன் அத்தலைவனின் அருளைப் பெற்றால், கட்டு அவிழ்ந்து விடுதலை பெறலாம். இதனையே எல்லாச் சமயங்களும் ஒவ்வொரு வகையில் இயம்புகின்றன. இதனைச் சிறப்பாகச் சைவசித்தாந்தம் என்னும் தமிழகத் தத்துவக் கொள்கை விளக்குகின்றது. பதி பசு பாசம் எனச் சைவசித்தாந்த நூல்கள் கூறும்

முப்பொருள் உண்மைகளையெல்லாம், "நுண்ணிய ஆலின் சிறு பழத்து ஒரு விதை" போல, விடு என்னும் ஓர் எளிய இனிய சிறிய தமிழ்ச் சொல்லே, சுருக்கமாகத் தொகுத்து உணர்த்திவிடுகின்றது எனச் சிதம்பர சுவாமிகள், பின்வரும் பாடலில் குறிப்பிடுகின்றார்.

"விடுஎன்று அறைதரு சொற்குப் பொருளோ
விடுதலை ஆதலினால்,
விக்குண் டோனும், கட்டும், முன்னர்
விளங்கும் தடமாகப்;
விடுறு கட்டுத் தானே விட்டுப்
பெயராது! இதுசடமாம்;
பிணிபட்டோன் அசுதந்திரன் ஆம்; இப்
பிணிபெயரச் செய்வோன்;
நீடு சுதந்தரம் உளனும் ஒருவன்;
நேரும் இவ் ஏதுவினால்,
நிகழ்பதி பசுபாசம் என்னும்முப் பொருள்,
நித்தியம் என்றருளி,
வேள்தனை வெல்லும் குருவாய் எனை ஆள்
மெய்ப்பொருள் நீ அன்றோ?
வேத கிரிப்பவ ரோக வயித்திய
வேணி முடிக்கணியே!"

'வானம்', 'வானுலகம்', 'துறக்கம்' எனப் பொருள்படும் 'Heaven' என்னும் ஆங்கிலச்சொல், 'மிகவும் முயன்று பாடுபட்டு உழைத்தே அடைவதற்கு உரியது' ("That which is to be attained by much heaving") என்னும் நுண்பொருட் குறிப்புடையது என்று, ஆங்கில மொழி அறிஞர்கள் கூறுவதும், இங்கு நாம் இயைபுபற்றி உணர்ந்து இன்புறுவதற்குரியது.

முடிவுரை :

"ஒவ்வொரு மொழியிலும், தனிச் சிறப்பாகப் பொருள் வளம் நிறைந்த சொற்கள் சில உள்ளன. அவைகள், செம்பாதி மறந்துபோன பழம் பெரும் தொடர்புணர்ச்சிகளையும், தம்மிடம் மறைவுறப் பொதிந்து வைத்துக்கொண்டுள்ள புதையலாகத் திகழ்கின்றன. சொற்பொருள் கூறும் நிகண்டுகள் உணர்த்தாத, எத்தனையோ பல அரிய பொருட் குறிப்புக்களை, அவைகள் விளக்கிக்கொண்டு நிற்கின்றன. அவற்றின் வளம் மிகுந்த நுண்பொருட்டிறங்களை, அவ்வம் மொழியாளரே செவ்விதின்

உணரவல்லவராவர். பொருள் வளம் நிறைந்த இனிய சொற்களினாலேயே கவிதைகள் அமைகின்றன; அவைகளே மொழிபெயர்த்து உணர்த்தமுடியாத. கவிதை அழகுக்குரிய திறவுகோலாகவும் திகழ்கின்றன. இத்தகைய பொருள்வளம் மிக்க சிறந்த சொற்கள், இந்திய மொழிகளில் ஏராளமாக உள்ளன" என அறிஞர் ஒருவர் கூறுவது,* ஈண்டு நாம் சிந்தித்து இன்புறுதற்குரியதாக உள்ளது.

இங்ஙனம், செந்தமிழ் மொழியின் சிறந்த தத்துவ உணர்வு மாட்சிமையினை நலங்கொள விளக்கிய, சிதம்பர சுவாமிகள் போன்ற சான்றோர்களின் நூல்களை, நாம் பலகாலும் ஓதி மகிழ்ந்து உய்வோமாக.

---

* "In every language there are some words that are peculiarly rich in meaning; they have a wealth of secret loveliness, drawn from ancient and half - forgotton associ - ations; they do not stand alone, but are part of a whole world of thought to which their dictionary definition often gives little clue, yet which is present, however dimly, to those who speak the language as their mother - tongue. A stranger may learn something of their power, but he can never savour them to the full. They are the stuff or which poetry is made, and the key to its untranslatable beauty. They aboerd in the great languages of India." — Majorie Sykes.

பார்வையாளர் குறிப்பு நகல்

தருமையாதீனம்

ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானம், திருபுவனம்.

தருமையாதீனம் ஆலயங்களுள் ஸ்ரீ கம்பகரேசுவரர் ஆலயம் மிகவும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டுவருகிறது. இக்கோயிலில் உள்ள சிறப்பு அம்சம் ஸ்ரீ சரபேசுவர் ஆகும். மிகவும் சக்திபெற்ற தெய்வமாகும். இம்மூர்த்தியைக் கண்டு தரிசிக்கும் பாக்யம் எனக்கு கிடைத்தமைக்கு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். ஆண்டவன் எல்லோருக்கும் அருள்புரிய பிரார்த்திக்கிறேன்.

(ஓ-ம்) கு. சே. கிருஷ்ணமூர்த்தி
1—10—74. (ஒ-ப்) தி. க. சீனிவாசன்.
உதவியாளர், சார் நிலக்கருவூலம் கும்பகோணம்.

அப்பரடிகளின் அருஞ்சொற்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், செஞ்சொற்கொண்டல்,
டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பிஎச்.டி.

(மலர் 33. இதழ் 11. பக்கம் 541 இன் தொடர்ச்சி)

1. 6: பேச்சு வழக்குச் சொற்களுக்குப் பெருமதிப்புத் தந்தவர் அடிகள்.

வைத்த	—	வைச்ச	—	வச்ச
நித்தலும்	—	நிச்சலும்		
விரித்து	—	விரிச்சு		
சிரித்து	—	சிரிச்சு		
கைத்த	—	கைச்ச	—	கச்ச

இவை ஒருவகையான மாற்றங்கள். இவை இவர் பாக்களிற் காணப்பெறும் வடிவங்கள். 14

உய்ந்து	—	உஞ்சு
மைந்தன்	—	மஞ்சன்

இத்தகு மாற்றங்களும் அடிகளார் வாக்கிற் காணப்பெறுகின்றன 15 'ஒன்று' என்ற எண்ணுப்பெயரை 'ஒண்ணு' என்று பேச்சு வழக்கிற் குறித்தலும் உண்டு. இவ்விருவகை வழக்குகளும் அடிகள் வாக்கிற் காணப்பெறும். 'ஒண்ணு என்ற வழக்கு ஓர் இடத்தில் மட்டுமே உள்ளது. ஏனைய 288 இடங்களிலும் 'ஒன்று' என்ற திருந்திய வடிவமே உள்ளது.

14 மேற்படி தேவாரப் பதிகங்கள் - பா. 1673; 1980; 2603; 1073; 1673 இவை 'Palataligation' என்று மொழியியலாரால் கூறப்பெறும்.

15 மேற்படி தேவாரப் பதிகங்கள், பா. 2402, பா. 1459.

" எண்ணுகேன் " என்ற எதுகைக்கேற்ப 'ஒன்று'ளே ' என்பதனை ' ஒண்ணுளே ' என்று மாற்றி வழங்குகின்றார் அடிகள். 16A இவ்வாறே சழக்கு, சங்கடம், பொந்தை, களேபரம், தொந்தம், மொண்ணை, சரக்கு முதலிய பல சொற்கள் அடிகளார் பத்திப் பாட்டிலக்கியத்திற் புதிய வாழ்வு பெற்றுவிடுகின்றன. 16 B

1.7 : 'மாட்டேன்' என்ற எதிர்மறைவினை அடிகளார் திருவாக்கிற் பொருளில் ஒரு மாற்றத்துடன் விளங்கக் காண்கின்றோம். 'செய்யமாட்டேன்', 'ஓடமாட்டேன்', 'பாடமாட்டேன்' என்ற தொடர்களுக்கு, 'செய்ய இயலாதவன் ஆனேன்', 'ஓடுதல் இயலாதவன் ஆனேன்', 'பாடுதல் இயலாதவன், ஆனேன்' என்று பொருள் கொள்ளுமாறு அடிகளார் பாநெறி அறிவுறுத்துகின்றது. 'நான் செய்யேன்', 'ஓடேன்', 'பாடேன்' என்று பொருள் கொள்ளுதல் அடிகள் பாநெறிக்குத் தக்கதன்று. அடிகளார் திருவாக்கில் 'மாட்டேன்' எனவரும் இடங்கள் அனைத்தும் இவ்வாறு பொருள் செய்யத் தூண்டுகின்றன.

'மாட்டுதல்' என்ற வினையடியாகப் பிறந்த பெயரெச்சம் 'மாட்டா' என்பதாகும்; இது 8 இடங்களில் வருகின்றது. 'மாட்டேன்' என்ற தன்மை ஒருமை வினை வடிவம் 60 இடங்களிலும், 'மாட்டீர்' என்ற முன்னிலைப் பன்மை வடிவம் 2 இடங்களிலும், 'மாட்டான்', 'மாட்டாதான்' என்ற வினையாலணையும் பெயர் வடிவங்களில் முன்னது 4 இடங்களிலும், பின்னது 1 இடத்திலும், 'மாட்டாதார்', 'மாட்டார்' என்ற படர்க்கைப் பன்மை வினையாலணையும் பெயர் வடிவங்களில் முன்னது 1 இடத்திலும், பின்னது 5 இடங்களிலும் வருகின்றன. இவையனைத்தும் இயலாமைப் பொருளிலேயே வழங்குகின்றன என்பதும், நேர் எதிர்மறைப் பொருளில் வழங்கப்பெறவில்லை என்பதும் அறியத் தருந்தன. 17

" காண மாட்டா ", " பாட மாட்டேன் ", " உணர மாட்டீர் ", " மாட்டாதான் ", " அறியமாட்டான் ", " காணமாட்டார் ", " மாட்டாதார் " – என வரும் இடங்கள் காணத்தக்கன

---

16 A மேற்படி தேவாரப் பதிகங்கள் - பா. 3052.

16 B பா. 499, 569; 499; 265, 1820, 1039 முதலியன.

17 மேற்படி தேவாரப் பதிகங்கள் - பா. 207, 268, 229, 553 756; 306; 2194; 341; 738; 2194 முதலியன.

பெரும்பாலும், மாட்டுதல் என்ற வினைப்பகுதியின் அடியாகப் பிறந்த இவ்வடிவங்கள், செயவென் எச்சங்கட்குப்பின்னர் வந்து விளங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

1. 8: ஐம்பொறிகளையும் அடக்கி நிற்கும் தொண்டர் இயல்பை நம் அருளாளர் வியந்து போற்றுவர். அறிவு என்ற அங்குசத்தால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்குதல் வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து. 18

" உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து "

திருஞானசம்பந்தரும், "தொண்டர் அஞ்சு களிறும் அடக்கி" என்று இவ்வித்தகத்தை எடுத்துப் பாராட்டுவர். 19 அப்பரடிகள், "தொழுது அகம் குழைய மேவித் தோட்டிமை உடைய தொண்டர்" என்று பாடுகின்றார். 20 இவ்விடத்துத் 'தொட்டிமை' என்ற பாடவேறுபாடும் உண்டு. 'தொட்டிமை' என்ற சொல், 'ஒற்றுமை, அழகு' என்ற பொருளில் சிந்தாமணி, பெருங்கதை ஆகிய நூல்களிற் காணப்பெறும். 21 A 'அஞ்சு பொறிகளையும் அறிவு என்னும் தோட்டியால் அடக்கும் தன்மை' என்ற பொருளில், இவ்விடத்துத் 'தோட்டிமை' (தோட்டி + மை — தோட்டிமை) அடிகள் வழங்கியிருத்தலும் கூடும். இச்சொல் வடிவம் அரும் பொருள் சான்ற அடிகள் ஆட்சியாக உள்ளது. 'அடங்காத் தன்மை' என்ற பொருளை உடைய 'பட்டி' என்ற சொல்லுடன் 'மை' விகுதியைச் சேர்த்துப் 'பட்டி - மை' என்ற சொல்லைப் படைத்துக் 'கீழ்மை' என்ற

---

18 மேற்படி திருக்குறள்; கழகப் பதிப்பு - குறள் - 24.

19 திருஞானசம்பந்தர் தேவாரப் பதிகங்கள் - சைவ சித்தாந்த மகாசமாசம் - முதற் பதிப்பு - 1931. பக். 409.

20 திருநாவுக்கரசர் தேவாரப் பதிகங்கள் - மேற்படி பதிப்பு. பா 510.

21 A சீவக சிந்தாமணி :- "ஆடல் தொட்டிமை உருவம்" பா. 1255; "தொட்டிமை உடைய வீணை" - பா. 2047.

21 B பெருங்கதை :- "கலாபத்துத் தொட்டிமை கலந்த தூசு" - உஞ்சைக் காண்டம் - 50-8.

பொருளில் ஆண்கின்றார் அடிகள். 22 'பட்டிமை' என்ற இச் சொல்லாட்சியும், 'தோட்டிமை' என்ற சொல்லிற்கு இங்குக் கண்ட பொருள் தக்கதென்பதற்குச் சான்றாகும். 'காதன்-மை' 23 'பத்தி-மை' 24 என்னும் வரும் சொல் வடிவங்கள் கருதத்தக்கன. ஒரு பண்புப் பெயரின் பின்னும் பண்பு விகுதியை ('மை')ச் சேர்த்து ஆள்வது அடிகட்கு இயல்பு ஆம்.

1. 9: 'கத்து' என்ற ஒரு சொல் தமிழில் வழங்குகின்றது; 'பொய், கரவு' என்ற பொருள்களை உடையது இச்சொல். இறைவன் உயிரின் உள்ளத்தில் இருந்தும் தன்னைத் தோன்றாமல் மறைத்து நிற்கும் அருள் இயல்பு உடையான். "தோன்றாத் துணையாய் இருந்தனன் தன் அடியோங்களுக்கே" என்று பாடுவர் அடிகள். பிறிதோர் இடத்து, "தோன்றாதென் உள்ளத்தின் உள்ளே நின்ற கத்தாம் அடியேற்கு" என்று பாடுகின்றார். 25 இவ்விடத்தே "கத்து" என்ற சொல்லிற்கு 'கரவு, பொய்' என்ற பொருள் கூறுவர்; தேவார ஒளிநெறி ஆசிரியர் 'ஒலி' என்ற பொருளைக் கூறுவர்; 'கத்து' என்னும் சொல் 'உள்ளொலி'யைக் (Inner voice) குறிக்கும் என்பது அவர் கருத்து. 26 "களவும் கத்தும் அற" என்ற மொழியின் பொருளாகத் 'திருட்டும் பொய்யும் நீங்க' என்று கூறுவதையும் இங்கு நினைவு கூரலாம்.

1. 10: அடைவுத்திருத்தாண்டகம் என்ற பகுதியில் பள்ளி, வீரட்டானம், குடி, ஊர், கோயில், காடு, வாயில், ஈச்சரம், மலை, ஆறு, குளம், கா என்று முடியும் ஊர்களை உரைத்து அவற்றைப் போற்றுகின்றார் அடிகள். 27 தமிழகத்து 'ஊரும் பேரும்' பற்றிய பல நுட்பங்களை இப்பதிகத்துச் சொல்வடிவங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

---

22 மேற்படி பதிப்பு - பா. 2174.

23 மேற்படி பதிப்பு - பா. 1456.

24 மேற்படி பதிப்பு - பா. 913.

25 மேற்படி பதிப்பு - பா. 2234.

26 தேவார ஒளி நெறி - அப்பர் (க) - சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் - 1960 - பக். 70.

27 மேற்படி பதிப்பு - பதிகம். 284.

" கடுவாயர் தமைநீக்கி என்னை ஆட்கொள்
கண்ணுதலோன் நண்ணுமிடம் அண்ணல் வாயில்
நெடுவாயில் நிறைவயல்சூழ் நெய்தல் வாயில்
நிகழ்முல்லை வாயிலொடு ஞாழல் வாயில்
மடுவார்தென் மதுரை நகர் ஆலவாயில்
மறிகடல்சூழ் புனவாயில் மாட நீடு
குடவாயில் குணவாயில் ஆனவெல்லாம்
புகுவாரைக் கொடுவினைகள் கூடாவன்றே, " 28

' ஆலம் - விடம்; ஆலவாய் என்பது நச்சுப்பாம்பு தன்வாயோடு வாலை வைத்து வளைத்து எல்லை காட்டியதால் மதுரை நகர்க்குக் காரணப் பெயர்' என்று புராணம் கூறும். ஆனால் ' ஆலவாயில்' என்பதே சரியான சொல் வடிவம் என்பது அப்பர் பாடலால் விளங்குகின்றது. நெய்தற் பூக்கள் அடர்ந்தது நெய்தல்வாயில்; முல்லைப் பூக்கள் செறிந்தது முல்லைவாயில்; ஆலமரங்கள் செறிந்தது மதுரையாகிய ஆலவாயில் என்கின்றது பாட்டு. இயற்கை நெறிப்படி இவ்வாறு " ஆலவாயில் " என்று இருந்த பெயரே, புராணகாலத்தே வேறு கதை விளக்கம் பெற்றிருத்தல் வேண்டும் என்று கருதலாம். 29 ' ஆலவாயில் அப்பனே அருள் செயாயே " என்று அடிகள் பாடுவதை, இவ்வாறே பொருள் கொள்ள வேண்டும்.

2. 0: இவ்வாறு அப்பர் தேவாரத்துக்காணப்பெறும் அரிய சொல் வடிவங்கள் பல. அவற்றை ஒவ்வொன்றாய் விரித்துரைக்கப்புகின் ' விரிப்பின் அகலும் தொகுப்பின் எஞ்சும் ' என்ற நிலை வந்திடும். ஆகலின் சுருக்கமாகச்சொன்னால், காய்தல் உவத்தல் அகற்றி நடுநிலைமையில் நின்று நோக்குவார்க்கு அப்பர் தேவாரச் சொற்கோவை காட்டும் விழுமிய சொல் வடிவங்கள் பல. அவை சிந்தனைக்கு விருந்தாகவும், இலக்கிய நயம் காட்டும் எழில் சார்ந்தனவாகவும் அமையும்; அதனுடன் இடைக்காலத் தமிழிலக்கியத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும், போக்கினையும் உணர்த்துவதாக அமையும் என்றும் கூறலாம்.

28 மேற்படி பதிப்பு - பா. 2803.

29 பார்க்க; " ஆலவாய் என்னும் பெயர் வழக்கு " கட்டுரை: சொ. சிங்காரவேலன் - ' ஞானசம்பந்தம் " (1965).

சாணத்தின் பெருமை

அமுதமொழிக்கொண்டல், அருள்மொழி அரசு,
திருமுருக. கிருபானந்தவாரியார்

சாணத்துக்குக் கோமயம் என்றும் ஒரு பேருண்டு. பசுவின் சாணம் புனிதமானது. எதனிலும் நல்லதுதான்; விஷக்கிருமிகளைக் கொல்லும். நாற்றத்தை மாற்றும். ஆனால் அது நாறும்.

சாணம் நச்சுக் கிருமிகளைக் கொல்லும். நாற்றத்தை மாற்றும். அது நாறாது. குழந்தைகள் மலசலம் கழித்த இடத்திலும் உண்ட இடத்திலும் சாணம் இட்டுச் சுத்தம் செய்வது, நச்சுக் கிருமிகளை மாற்றும் பொருட்டேயாகும். தெருவிலே சாணந் தெளிப்பார்கள்; அது நச்சுக் கிருமிகள் உள்ளே வரவொட்டாமல் தடுப்பதற்காகவே. வீட்டையும், வழிபாட்டு அறையையும் பசுவின் சாணத்தால் மெழுகுவார்கள். சுகாதாரத்துக்கு இன்றியமையாதது சாணம்.

சாணத்துக்கு நச்சுக் கிருமிகளை அழிக்கும் ஆற்றல் உண்டு என்பதை நன்கு உணர்க. நேர்வாளம் என்ற நச்சுக் கொட்டையை மருத்துவர்கள் சாணத்தில் மூன்றுநாள் ஊறவைத்து எடுத்து மருந்துக்குச் சேர்க்கின்றார்கள்.

நமது தாய்மார்கள் ஈயம் பூசிய ஏனத்தில் நவாச்சாரம் பூசப்பட்டதால் அதன் நச்சுத் தன்மையை மாற்ற, அந்த ஏனத்தில் சாணத்தைக் கரைத்துவைத்து சுத்தப்படுத்துகின்றார்கள்.

வீட்டில் உள்ள நச்சுக் கிருமிகளை அழிக்கும்பொருட்டு சாணம் இடுகின்றார்களே? அதுபோல் நம் உடம்பிலுள்ள நச்சுக் கிருமிகளை யகற்ற வாரத்துக்கு ஒருமுறை சாணந்தேய்த்துக் குளிக்கலாமா என்ற வினா எழும். இதற்கு விடை கூறுதும்: வீட்டிலே உள்ள நச்சுக் கிருமிகளைக்காட்டிலும், நம் உடம்பில் நச்சுக் கிருமிகள் அதிகம். ஆதலால் சாணத்தின் ஆற்றலை அதிகப்படுத்தவேண்டும்.

தங்கத்தைப் பார்க்கினும், தங்கபஸ்மத்துக்குப் பெருமை அதிகம். தாம்பரத்தைவிட தாம்பரபஸ்மத்துக்கு ஆற்றல்

அதிகம். அதுபோல் சாணத்தினும் சாணத்தின் பஸ்மத்துக்கு ஆற்றல் அதிகம். எனவே திருநீற்றைப் பூசிக்கொள்ளுவதனால் உடம்பில் உள்ள நச்சுக் கிருமிகள் விலகும்.

அவரைச் செடியில் வரும் கரிய கிருமிகளை சாம்பல் தெளித்து மாற்றுவது கண்கூடாக யாரும் அறிந்த உண்மை. சாமானியமான அடுப்புச் சாம்பலுக்கே அக்கிருமிகளை அழிக்கும் ஆற்றல் இருக்குமானால் விதப்படி தயாரித்த விபூதிக்கு எத்துணை பெருமையிருக்கும் என்பதை உய்த்துணர்க.

போர்வீரனை, மாற்றார் விடும் ஆயுதங்கள் உடம்பைத் தொளைக்காமல் காக்கும் வஜ்ரகவசம்போல், ஆன்மாக்களை, தீவினைகள் தாக்காவண்ணம் காக்கும் வயிரக் கவசம் திருநீறு என உணர்க.

" கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வீரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே. " — திருமந்திரம்.

இந்தத் திருமந்திரத்தைப் பலமுறை படிக்கவும். சிவபெருமானே திருநீறு தரித்துக்கொண்டிருக்கின்றார் என்று திருமூலர் தெரிவிக்கின்றார்.

ஆன்மாக்களாகிய நாம் செய்த தீவினை நீறும் பொருட்டு, திருநீறு தரிக்கின்றோம். சிவபெருமானுக்கு வினை ஏது? அவர் ஏன் திருநீறு தரித்துக்கொள்கின்றார்? என்ற ஒரு வினா எழும். நோய்வாய்ப்பட்ட குழந்தைக்காக தாய் மருந்துண்பது போல், நமது வினைதீர, நம் தாயுந் தந்தையுமான இறைவன் திருநீறு பூசிக்கொள்கின்றான் என உணர்க.

இனி திருமாலும் திருநீறு தரித்துக்கொண்டிருக்கின்றார் என்பதை ஆழ்வார்களின் திருப்பாசுரத்தால் தெளிக.

" கரியமேனி மிசை வெளிய நீறுசிறிதே யிடும்
பெரிய கோலத் தடங்கண்ணன் விண்ணோர் பெருமான்றன்னை
உரியசொல்லால் இசைமாலைகள் ஏத்தி உள்ளப்பெற்றேர்க்கே
அரிய துண்டோ எனக்கின்று தொட்டும் இனிஎன்றுமே. "

— திருவாய்மொழி.

பல பிறவிகளில் செய்த பெரும் புண்ணியம் இருந்தால் மட்டும் ஒருவனுக்கு திருநீற்றில் மெய்யன்பு உண்டாகும். பக்தியுடன் சித்தியளிக்கும் விபூதியைத் தரித்துக்கொண்டோர் செல்வ நலன்களையும் பிற நலன்களையும் பெறுவார்கள். நெடுநாள் வாழ்ந்தபின் ஒளி நிறைந்த விமானத்தில் ஏற்றித்

தேவர்கள் எதிர்கொண்டு அழைத்துச்சென்று இந்திரலோகத்தில் இருத்துவார்கள். அங்கு நலமெலாம் துய்த்தபின், சிவசாயுச்சியம் பெறுவார்கள்

திருநீறு தரிக்காதவர் செய்யும் தவம் முதலியன, உவர் நிலத்தில் இட்ட விதை விளையாது விளைவதுபோல் பயன்தரமாட்டா. தவம் செய்யும் ஆற்றல் இல்லாதவர் திருநீற்றை உள்ளன்புடன் பூசிக்கொண்டால், தவம் தானம், தருமம், விரதப் முதலியயாவும் செய்த பயனைப் பெறுவார்கள். பிதிர் தினத்தில் திருநீறணிந்தார்க்குச் செய்யும் தான தருமம் மிகுந்த பயன்களைத் தரும் என உணர்க.

ஏழுகோடி மந்திரங்களும், எண்ணில்லாத தவமும், கங்கை, யமுனை, கோதாவரி, சரசுவதி, நருமதை, சிந்து, காவேரிமுதலிய சிறந்த தீர்த்தங்களும், அசுவமேதம் முதலிய வேள்விகளும், திருநீறு தரும் நலத்தை நல்கமாட்டா. திருநீறு தன்னையணிந்தார்க்கு எல்லையற்ற நலன்களை நல்கும்.

திருநீறணிந்த வேடமே மெய்ப்பொருள் எனக்கொண்டு வழிபட்டு மெய்ப்பொருள் நாயனர் சிவபதம் பெற்ருர்.

சேரமான்பெருமாள் முடிசூட்டிக்கொண்டு பட்டத்து யானை மீது அவனியெல்லாம் போற்ற பவனி வந்துகொண்டிருந்தார். எதிரிலே ஒரு ஏகாலி முதுகில் துணி மூட்டையும், தலையில் உவர்மண்ணும் சுமந்துகொண்டுவந்தார். சிறிது மழைபொழிய அதனல் உவர்மண் கரைந்து உடலில் தோய்ந்தது. பின்னர் வெயில்காய அது உலர்ந்து வெண்ணீறுபோல் காட்சியளித்தது.

இதனைக்கண்ட சேரர்கோமான் யானையைவிட்டு இறங்கி அந்த வண்ணான் கால்மீது விழ்ந்து வணங்கினர். அவர் நடுங்கி ஒதுங்கி சிந்தை கலங்கி “அரசர் பெருமானே! என்னை யார் என்று எண்ணினீர்? அடியேன் தங்கள் அடியாரை அஞ்சலிக்கும் வண்ணான்” என்ருன்.

சேரர்பெருமான் “அப்பா! அடிச்சேரன் அடியேன், நீ ஏகாலி என்றும், உன்மீதுள்ள வெண்மை உவர்மண்ணல் ஆகியது என்றும் உணர்வேன். அடியேன் எப்போதும் தப்பாது எண்ணி வழிபடும் திருநீற்றின் அன்பு வேடத்தை இது நினைவுபடுத்தியது. அதனல் வணங்கினேன். நீர் வருந்தாது செல்லும்” என்று மொழிந்தார். என்னே! இவருக்கு இருந்த திருநீற்றின் பக்தி! ஆ! ஆ! மெய்ச்சிலிர்க்கின்றது; உள்ளம் உருகுகின்றது.

அவரோ சக்ரவர்த்தி. அவனே சலவைத் தொழிலாளி. தனது பெருமையையும் அவனுடைய சிறுமையையும் சிந்தித்தாரில்லை. திருநீற்றின் பெருமையைச் சிந்தித்தார்; வந்தித்தார்.

நன்றி. — அருள். 17—9—74.

சிவதருமோத்தரக் கட்டுரை எண் 23.

ஞான யோகம்

தருமையாதீனப்புலவர், மகாவித்துவான்

திரு. ச. தண்டபாணி தேசிகர்

ஆன்மாக்கள் ஓயாமல் கடல் அலையும் காற்றும் போல பிறப்பு, இறப்பு என்கின்ற சூழலில் சிக்கி உழல்வன. அவைகள் பிறப்பு, இறப்புக்களாகிய துன்பத்தை நீக்கவேண்டுமானல் ஞானைந்தத்தையும் ஞான யோகத்தையும் அடைதல் இன்றி யமையாதது; அதனை விளங்கக் கூறுகின்றேன் கேட்பாயாக எனக் குமாரக்கடவுள் அகத்தியர்க்கு அறிவிக்கிருர்.

அநாதிநித்தியனும் அநாதியே மலத்தில் நீங்கியவனும், நித்தியானந்தனும் ஆகிய கடவுளின் உண்மைத் தன்மையை முன்னர் ஆராய்ந்து அனுபவத்தில் அறிந்த ஆசார்யன் மாணுக் கர்க்கு அறிவிப்பது ஞானமாம். தோற்றக்கேடுகளில்லாத கடவு ளோடு வேற்றுமையின்றிக் கலந்து இருத்தலை அறிதலே யோக மாம்.

ஆன்மாக்களுக்குக் கலையாததத்துவங்கள்கழன்றபிறகு சிவம் ஆன்ம சித்சத்திளிடம் சித்சத்தியானது சிவத்தை ஆன்மாவி னிடமாகப் பிரகாசிக்கச்செய்யும். அதனை ஞானசாரியன் உபதே சத்தால் அறிவிப்பான். அவன் அறிவித்தவற்றை உணர்ந்து தெளிந்தவனே ஞான யோகி.

மக்கள் மலமறுப்பினுல் சிவதரிசனம் படாமல் துயில சிவ யோகி மட்டும் சிவத்தைத் தனது ஞானக் கண்ணுல் விழித்துப் பார்த்திருப்பன். உலகவர் ஊனக் கண்ணுல் கண்ட விஷயங் களை சிவயோகி தான் காணுமல் தூங்குவன். ஆதலால் அவன் எல்லாமாகிய இறைவனோடு கலந்து திருவடித் தாமரையே தனது தலைக்கு அலங்காரமாகச் சூடியிருப்பன். அவனுக்கு சிவத்தைத் தவிர வேறு அறியும் பொருள் இல்லை.

இத்தகைய ஞான யோகச் சிறப்பைச் சிவாகமங்கள் தெரிவிக் கின்றன; சிவாகமங்கள் இருபத்தெட்டு. அவை காமிகம் முதல்

பாதுளம் ஈருனவை. இவை இறைவனுல் அருளிச்செய்யப் பட்டவை. இவைகளே ஞான யோகத்தை விளங்கக் கூறுவன. இவைகளேயேயன்றி கர்மயோகமாகிய புண்ணிய பாபங்களேயும் அவற்ருல் விளேயும் பயன்களேயும் ஆகமங்கள் சொல்லும்.

அநாதிமல முத்தனகிய இறைவன் யார் எனில் காண்டல் அளவையால் அளக்கப்படும் பொருளேக் கண்டு அனுபவித்து அறிந்து அனுபவித்துப் பின்னர் அனுமானித்து அறியும் பொருளேயும் அறிந்து இவ்விரண்டற்கும் எட்டாததாக உள்ள பொருளே நூல் அளவையால் நுனித்து அறியுமாறு நூல்களேச் செய்தவனே அநாதிமல முத்தனுகிய பரசிவம்.

பல பிறவிகளில் பௌத்தம் முதலான ஒன்றற்கொன்று ஒவ்வாத சமய தத்துவங்களே உணர்ந்தவர்கள் ஏதோ நல்லறிவு சற்று மிக சைவ சமயத்தை அடைவார்கள். பிறகு இறைவன் அருளிய ஆகமங்களில் சொல்லப்பட்ட சரியை கிரியைகளே அனுட்டித்துப் பின்னர் ஞான யோகத்தை அடைவார்கள். அடைந்த அன்று அவ்வாறு உடற்பற்றைத் துறந்து உண்மை நிலேயையும் அடைவார்கள் இங்ஙனம் சைவசமயத்தில் நின்ருேரே மிகச் சிறந்தவர். எடுத்த பிறவியிலேயே ஆணவ வன்மையை வாட்டிப் பேரின்பத்தைவழங்கும் நெறிகளே ஆராய்ந்துஉணர்ந்து வீடுபெறும் தகுதியினர் அங்ஙனம் அன்றி மலக்கட்டோடுகூடிய புன்னெறிபற்றிய ஆசாரியர்களால் சொல்லப்பட்ட புறச் சமய நூல்களேக் கற்றவர்கள், அமிர்தம் இருக்கக் கூழ் குடித்தவர் களோடு ஒப்பாவார்கள்.

புறச் சமய நூல்கள் பிரமன் முதலிய தேவர்களே பெரியவர் என்று பேசும். வேதாந்த நூல் எல்லா உயிர்களேயும் பரப்பிரம்மம் என்று பேசும். புத்தமும், புத்தி தத்துவமே பரம் என்று பகரும். அங்ஙனம் ஒவ்வொன்றும் தம்முள் மாறுபடும்.

ஆன்மாக்கள் கால தத்துவங்களால் ஆகிய சரீரத்தால் உடலில் கட்டுண்டவர்கள். உடலோடு கூடாதவழி மலமறைப் பால் அறிவு தடைப்படுபவர்கள். ஆதலால் அவர்கள் ஒருபோ தும் பிறரும் ஆகார். ஆனுதேய மலங்கள் அற்றவனும், ஆனந்த னும், நித்தியனும் ஆகிய சிவனே பரப்பிரும்மம் ஆவான். அவனே படைத்தல் முதலாகிய தொழில்களுக்கு உரிய பிரம்மன் முதலாகிய காரண கருத்தாக்களே உண்டாக்குபவன். வெயி லோன், வெண்ணே, மெழுகு முதலிய பொருள்களே உருக்கு தலும், ஈரமண்ணே உலர்த்துதலும், தாமரைப்பூ முதலியவற்றை மலர்த்துதலும், அல்லி, நெய்தல் முதலிய பூக்களேச் சுருங்கச்

செய்தலுமாகிய வினை வேறுபாட்டைச் செய்யினும் சூரியன் விகாரி ஆகாதவாறு போல இறைவனும் தத்தம் காரண கருத்தர்களைக் கொண்டு படைத்தல் முதலாகிய தொழில்களைச் செய்விக்கத் திருவுளம் பற்றினாலும் விகாரி ஆகான். இறைவன் அனாதேய மலமற்றவன். ஆன்மாக்கள் மும்மலங்களால் கட்டுண்டவர்கள். இறைவனுடைய திருவருளைப் பெற்ற பிறகு அவனருளாலேயே ஆன்மாக்கள் கட்டறுத்து வீடுபெறும்.

செம்பிருக்கிறது. அதனோடு அனாதேய களிம்பும் கலந்திருக்கிறது. அச்செம்புக்குக் களிம்பைப் போக்கிக்கொள்ளும் ஆற்றல் இல்லை. அக்களிம்பைப் போக்கிக்கொள்ள விரும்புகின்ற ஒருவன் அதற்குரிய உபாயங்களையும், சித்தியையும் உடையவன் ஆவன். அவனுக்குக் களிம்பைப் போக்கும்சக்தி தானாகக் கிடைப்பதைப் போல மாயா காரியமாகிய சரீரத்தை ஆன்மாக்களுக்கு இறைவன் கொடுக்கின்றான். அந்த சரீரம் பருவுடல், நுண்ணுடல் என இருவகைத்தாம். பருவுடல் என்பது மண் முதல் ஆகாயம் ஈறான ஐந்து பூதங்களினது சேர்க்கையால் உண்டாவன சூக்கும உடல் என்பது கால தத்துவம் முதல் நிலம் ஈறாகிய முப்பத்தொரு தத்துவத்தாலும் ஆவது. சூக்கும உடலுக்குக் காரணமாகிய முப்பது தத்துவங்களும் சிவபெருமானுடைய திருவருளால் ஏவப்பெற்று, மாயையில் இருந்து தோன்றும். குருடன் கோல் ஊன்றி நடப்பதுபோல ஆன்மாவும் வாதனை வயத்தால் புவனபோகங்களைத் துய்க்கும். மூலமலத்தால் தடைப்பட்ட ஞானக் கிரியைகளை உடையவை. சங்காரகாரணனாகிய இறைவன் அருளிய வித்தைமுதலிய தத்துவங்களால் உண்டான அற்ப அறிவு, மாயாபோகங்களை இது இன்னது என நிச்சயத்துக் கொடுக்க நுகர்ந்து போக்கு வரவு புரியாநிற்கும்.

உலகாயதன், ஊன்றி உணரும் உண்மையறிவு இல்லாதவன் அவன் உடலே உயிர் என்பான். புத்தனோ, அகங்காரமாகிய அந்தக்கரணமே உயிர் என்பான். அருகனோ எல்லா உயிர்களிடத்தும் கலந்துநிற்கின்ற முக்குணங்களே உயிர் என்பான். ஆராயின் இவை உயிரல்ல. இவை அனைத்திற்கும் மேலான நிலைபெற்ற ஞானக் கிரியைகளை உடையதே உயிர். உடல் அறிவற்றது; ஆதலால் அறிவுடையவனாகிய ஆன்மாவை அன்றி இயங்காது. இந்தப் பருவுடலுக்கு நுண் உடலாகிய கலாதிகள் வீட்டுக்கு விளக்குப்போல அறிவை விளங்கச்செய்யும். ஆதலால் இந்த இருவகை உடலும் உயிரின் வேறானவை. நீ காண்டல் அளவை ஒன்றையே நம்புகின்றவன்; ஆதலால் அதனைக்கொண்டே விளக்குகின்றேன். உயிர் உடலை

இயக்குவதால் உடலுக்கு உயிரே இறைவன். உயிர் கடவுள் அருளால் இயங்குவதால், உயிருக்குத் தலைவன் சிவன். மாயாவாதிகள் உயிரை ஞானசொரூபி என்பார்கள். வைசேடிகர்கள் மனம் முதலிய தத்துவங்கள் கூடியபொழுது அறிவு உண்டாம் என்பார். பரிணாமவாதிகள் ஆன்மாவிற்குச் சுதந்திரமாக அறிவில்லை. எல்லாம் அறியும் இறைவன் உணர்த்த உயிர்கள் உணரும் என்பார்கள். அநாதியே மூலமலத்தால் தடுக்கப்பட்ட உணர்வை மாயை எனும் துணைக்காரணமானது ஒத்தாசை செய்ய மலவன்மை கெட்டது ஆன்மா. கர்ம யோகிகள் உடலில் உயிர் எங்கோ ஒரு மூலையில் இருக்கிறது என்பார்கள். நையாயிகர்களும், பாஞ்ச ராத்திரிகர்களும் உயிர் பரமாணுவடிவினது என்பார்கள். சமணர்கள் உடல் முழுவதிலும் வியாபித்திருக்கிறது என்பார்கள். மாயாவாதிகள் உயிர் போக்குவரவு இன்றி எங்கும் நிறைந்திருக்கின்ற பூரண பொருள் என்பார்கள். இவர்கள் அனைவரும் உண்மை காணாதவர்கள். நிர்மலமாகிற சிவசக்திக்கு சிவன் வியாபகன். அவள் வியாப்பியம். அவள் ஆன்மாக்களுக்கு வியாபகி. ஆன்மாக்கள் அவளுக்கு வியாப்பியம். ஆன்மாக்கள் ஆன்ம சக்திக்கு வியாபகர். ஆன்மாக்களுக்கு ஆன்ம சக்திகள் வியாப்பியம். உலகத்திற்கு ஆன்ம சத்தி வியாபகம்; அதற்கு உலகம் வியாப்பியம். இவ்வாறு வியாபக வியாப்பியத் தன்மையால் சிவம் முதல் சகம் ஈறானவை ஒன்றின் ஒன்று அடங்கியுள்ளன. வியாபகமானது - அதிக விருத்தியை யுடையது; வியாப்பியமானது - அதனுள் அடங்குவது. இங்ஙனம் வியாபக வியாப்பிய இலக்கணங்களைக் கொண்டு ஆன்மாவின் இச்சை செயல்களை அளந்தறிந்து ஒன்றியிருந்து, உற்றுநோக்கி, ஞான அனுபவத்திற்கு வாயில்களாக இருப்பதே ஞானயோகம்.

மாயூரத்தில் துலாமாதம்

திரு. என். இராமகிருஷ்ண.

தேவாரப் பாடல்பெற்ற ஊர்கள் எல்லாமே தலங்கள்; காவிரித்துறை அவ்வளவும் தீர்த்தங்கள். ஒவ்வொரு மாதமும் இந்த ஊர்களில் ஏதாவது ஒரு திருவிழா; கொட்டுமேளம்; கூட்டம்; நீராட்டம்; ஆரவாரம். இந்தத் தலங்களுக்குள் மயிலாடுதுறையும் ஒன்று. பெயரே எவ்வளவு அழகாக இருக்கிறது. காவிரிக் கரையில் அடர்ந்து செறிந்த பூம்பொழில்கள் உள்ளன. அவற்றிலே மயில்கள் ஆடுகின்றன. மற்ற இடங்களில் மயில்கள் ஆடினாலும் இந்த ஊரில் மாத்திரம் அந்த ஆட்டத்திற்கு ஒரு தனிச்சிறப்பு அமைந்திருக்கின்றது. மயில்கள் ஆடும்போது அதன் அழகை மாத்திரம் கண்டு மற்ற ஊர்க்காரர்கள் மகிழ்வார்கள். ஆனால் இந்த ஊரிலோ மயிலாடுவதைக் கண்டால் அதன் அழகிலே ஈடுபடுவது அல்லாமல், உலகத்தை எல்லாம் ஆக்கி அளித்து அழிக்கும் இறைவனும் இறைவியுமே மயிலுருக்கொண்டு ஆடினார்கள் என்பதை நினைவு கொள்கின்றனர். சிவபெருமானும் அம்பிகையும் மயிலுருவெடுத்து ஆனந்தமாக ஆடியதுறை இது. நடராஜ மூர்த்தியாக ஆனந்தத் தாண்டவம் செய்தருளிய காலத்தில் அம்பிகை ஆடவில்லை. ஆனால் இங்கோ அம்மையும் அப்பனும் ஆடினார்கள். மயிலாக ஆடினார்கள்; அதனால்தான் மயிலாடுதுறை என்ற பெயர் இதற்கு அமைந்தது. அது ஒரு கதை.

தக்ஷன் என்பவன் பிரம்மாவினுடைய பிள்ளை. அவன் தவம் புரிந்து அம்பிகையைத் தனக்கு மகளாகவும் பரமசிவனை மருமகனாகவும் அடைந்தான். தக்ஷனுக்குப் பெண்ணாக வந்தமையால் தாக்ஷாயணி என்ற பெயர் அம்பிகைக்கு அமைந்தது.

தக்ஷன் ஒரு யாகம் செய்யத் தொடங்கினான்; சிவபெருமானிடத்தில் அவனுக்குப் பக்தி இல்லை. அவரை அவமதிக்க எண்ணினான். யாகத்திற்கு எல்லாத் தேவர்களையும் அழைத்தான். சிவபிரானை அழைக்கவில்லை. ஆனாலும் தாக்ஷாயணியாகிய அம்பிகை அந்த யாகத்திற்குப்போனாள். அவளையும் தக்ஷன் சரியானபடி வரவேற்கவில்லை; அதோடு அவமதிப்பும் செய்தான்.

அதனால் அம்பிகைக்குக் கோபம் உண்டாகிவிட்டது. நேரே கைலாயம் சென்று சிவபிரானிடம் முறையிட்டுக் கொண்டாள். அதை அறிந்த பெருமான் வீரபத்திரரை அனுப்பி தக்ஷன் யாகத்தை அழிக்கச் செய்தார்.

தாக்ஷாயணிக்குத் தன் தந்தையின் அவமதிப்புக்கு ஆளானது பொறுக்கவில்லை. அவனுக்குப் பெண்ணாக இருக்கும் இந்த உருவத்தை விட்டுவிட எண்ணினாள். பெண் மயிலாக உருவம்கொண்டு மாயூரத்திற்கு வந்து எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைப் பூஜித்துத் தவம் புரிந்தாள். தவத்திற்கிரங்கிய பெருமான் ஆண்மயிலாக உருவெடுத்துத் தோன்றி அம்பிகையாகிய பெண் மயிலோடு இன்ப நடனம் இயற்றினார். பிறகு இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. அப்போது சிவபெருமான் இங்கே ஒரு தாண்டவம் செய்தார். அதற்குக் கௌரீ தாண்டவம் என்று பெயர். அம்பிகை மயிலாகப் பூசித்ததலமாதலால் கௌரீ மாயூரம் என்ற பெயர் ஏற்பட்டது.

இந்த நடனம், திருமணம் ஆகிய நிகழ்ச்சிகள் எல்லாம் ஐப்பசி மாதத்தில் நிகழ்ந்தன. ஆதலால் இவ்வூர் ஆலயத்தில் ஐப்பசி மாதம் திருவிழா நடைபெறுகின்றது. இந்த விழாவில் ஐந்தாவது நாளில் அம்பிகை இறைவனைப் பூஜை செய்யும் உற்சவம் நடைபெறும். இதை "**மயிலம்மன் பூஜை**" என்று சொல்லுவார்கள். ஏழாவது நாள் திருமணக்காட்சியும் ஒன்பதாவது நாள் தேர்த் திருவிழாவும் நடைபெறும். ஐப்பசி மாதத்தைத் துலாமாதம் என்று சொல்லுவார்கள். இந்த மாதத்தில் காவிரிக்கு ஒரு தனிச்சிறப்பு அமைகிறது. கங்கையே காவிரியோடு இணைந்து விடுவதாகப் பக்தர்கள் நம்புகின்றார்கள். துலாமாதத்தில் காவிரியில் நீராடுவதனால் நன்மை உண்டாகும். காவிரியில் உள்ள எல்லாத் துறைகளும் துலாஸ்நானத்துக்கு உரியவையே. மாயூரத்தில் உள்ள காவிரித்துறையில் ஸ்நானம் செய்தால் அதிக நன்மை ஏற்படும்.

மயிலாடுதுறையில் ஐப்பசி மாதம் முப்பது நாளும் திருவிழா தான். தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளிலிருந்து எல்லாம் மக்களும் துலா ஸ்நானம் செய்வதற்கு இங்கே வருவார்கள். ஐப்பசி மாதக் கடைசி நாளில் ஏராளமான கூட்டம் கூடும். அதைக் "**கடைமுகம்**" என்று சொல்வார்கள்.

காவிரியில் துலா ஸ்நானம் செய்யும் கட்டத்திற்கு ரிஷப தீர்த்தம் என்று பெயர். இறைவனுடைய வாகனமாகிய ரிஷப தேவர் இந்தத் தலத்தில் பூஜை செய்து வரம் பெற்று இந்தத் தீர்த்தத்தில் நீராடினர். அவர் பெயரால் இந்தத் தீர்த்தத்திற்கு இப் பெயர் உண்டாயிற்று. காவிரிக்கு நடுவில் ரிஷப தேவருடைய விக்ரகம் உள்ளது ; சிறிய கோயிலும் உள்ளது.

விழாவில் மாயூரநாதர் எழுந்தருளியிருப்பதற்குக் காவிரிக் கரையில் மண்டபங்கள் இருக்கின்றன. அந்த இடத்தை "லாகடம்" என்று சொல்லுகின்றார்கள். "துலாக்கட்டம்" என்ற பெயரே லாகடமாகி விட்டது!

மாயூரநாதர் கோவில் பெரியது. இங்குள்ள மாயூரநாதரை வள்ளல் என்றும் சொல்லுவார்கள். அம்பிகையை அஞ்சலை என்று தமிழிலும் அபயாம்பிகை என்று வடமொழியிலும் வழங்குவார்கள். இது தேவாரம் பெற்ற தலம். இத் தலத்தைப் பற்றிய விஷயங்களை ஸ்காந்தத்திலும், சிவ ரகசியத்திலும் துலா காவேரி மகாத்மியம் என்ற நூலிலும் காணலாம். ஸமஸ்கிருதத்தில் இந்தத் தலத்தைப் பற்றி நான்கு புராணங்கள் இருக்கின்றன. தமிழில் பொன்விளைந்த களத்தூர் ஆதியப்ப நாவலர் என்பவர் இயற்றிய புராணம் ஒன்றும், மகாவித்துவான் ஸ்ரீ மீனட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய புராணம் ஒன்றும் உண்டு. மயிலை அந்தாதி முதலிய பிரபந்தங்களும் உள்ளன.

ஒரு முடவன் துலா மாதத்தில் மாயூரம் ரிஷப தீர்த்தத்தில் நீராட வேண்டுமென்று எண்ணினன். அவன் ஐப்பசி மாதத்திற்கு முன்பே தன் ஊரைவிட்டுப் புறப்பட்டான். மெல்ல மெல்ல ஊர்ந்து வந்தான். ஐப்பசி மாதம் பிறந்துவிட்டது. அவன் மாயூரத்திற்கு நெடுந்தூரத்தில் இருந்தான். எப்படியாவது ஐப்பசி மாதம் முப்பது நாட்களில் ஒரு நாளாவது அங்கே சென்று நீராட வேண்டுமென்ற எண்ணம் அவனுக்கு இருந்தது. ஐப்பசி மாதத்தின் ஒவ்வொரு நாட்களும் கழிந்துகொண்டே வந்தன. "கடவுளே ஐப்பசி மாதத்திற்குள்ளே நான் காவிரியில் நீராடும்படி அருள வேண்டும்" என்று வேண்டினன். "நான் செய்த பாவம் இடைநின்று தடுக்கின்றதே என் செய்வேன் போய்ச் சேருவேனே மாட்டேனே? போய்ச் சேராவிட்டால் என் உயிரைவிட்டு விடுவேனே அல்லாமல் ஊர் திரும்பமாட்டேன்"

என்று சபதம் செய்தான். இன்னும் இரண்டே நாட்கள் இருக்கின்றன. மாயூரத்தை அடையவில்லை. அவன் வேகம் அதிகமாயிற்று! முடவன் தானே! உயிரைப் பிடித்துக்கொண்டு வந்தான் கடைசியில் மாயூரம் வந்துவிட்டான். ஆனால் ஐப்பசி மாதம் முடிந்து கார்த்திகை பிறந்து விட்டது. எத்தனையோ இன்னல்களுக்கு ஆளாகி வந்தான். எல்லாம் பயனில்லாமல் போய்விட்டது. அவனுடைய பரிதாப நிலையைப் பார்த்து அவனது நம்பிக்கையையும், பக்தியையும் கண்டு இறைவன் அன்று அவனை நீராடச் செய்து அருள்புரிந்தார். புனித நாளில் தான் வரவில்லையே என்று, அவன் நினைத்தான். ஆனால் அவன் வந்த நாளே புனித நாளாகி விட்டது. அதுமுதல் **"முடவன் முழுக்கு"** என்று அந்த நாளைப் பக்தர்கள் கொண்டாடுகின்றார்கள். கடை முகமாகிய கடைசி நாளுக்கு எவ்வளவு சிறப்பு உண்டோ அவ்வளவு சிறப்பு முடவனுக்கு மோக்ஷம் தந்த கார்த்திகை முதல் நாளுக்கும் உண்டு!

இங்கு, திருவாவடுதுறை ஆதீனத்திற்கு சொந்தமான கட்டளை மடம் உள்ளது. மாயூரநாதர் ஆலயம் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்தது. இத் திருக்கோயிலிலுள்ள ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம் தருமை ஆதீனத்தைச் சேர்ந்தது. ரிஷப தீர்த்தக் கரையில் – காவேரியின் வடகரையில் வள்ளலார் கோவில் உள்ளது. அங்கே தக்ஷிணாமூர்த்தியின் சந்நிதி பிரசித்தம். அவரைக் கைகாட்டும் வள்ளலார் என்று வழங்குவதுண்டு. இத் திருக்கோயில் தருமையாதீனத்தின் அருளாட்சியில் உள்ளது. இறைவன் பெயர் ஸ்ரீவதான்யேசுவரர், இறைவியின் பெயர் ஸ்ரீஞானம்பிகை இங்கும் துலா மாதத்தில் மகோற்சவம் நடைபெறும். பெருமான் காவிரியின் வடகரையில் உள்ள மண்டபத்தில் எழுந்தருளியிருந்து தீர்த்தம் கொடுத்தருளுவார், இத்திருக்கோயில் இருக்கும் பகுதி உத்தரமாயூரம் என்று வழங்கப்பெறும். கங்கை, யமுனை, சரஸ்வதி என்ற மூன்று தெய்வ நதிகளும் துலா மாதக் கடைசி நாளன்று (கடை முழுக்கு) காவிரியில் நீராடி தங்கள் பாவங்களைப் போக்கிக் கொள்வதோடு உத்தர மாயூரத்தில் உள்ள ஞான வள்ளலை வழிபட்டனர் என்றும் கூறப்படுகிறது. இத் தலத்தைச் சுற்றி பல தலங்கள் உள்ளன. மயிலாடுதுறை இப்போது மாயூரம் என்று வழங்குகின்றது. பழைய வளம் இப்போது இல்லை. மயில் ஆடுவதைக் காண இயலாது. காவிரியின் நீர் வளமும் பழையபடி இல்லை. ஆனாலும் துலா நீராடலும் விழாவும் இன்றும் இங்கே நடந்து வருகின்றன.

செய்திகள்

தருமையாதீனம், ஸ்ரீ துர்க்காம்பிகை திருக்கோயிலில் சதசண்டி வேள்வி விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம், ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்காம்பிகை திருக்கோயிலில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் 16—10—74 முதல் 25—10—74 முடிய உள்ள நாட்களில் 24ஆவது சதசண்டி வேள்வி விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

15—10—74 செவ்வாய்க்கிழமை கணபதி ஹோமம் யஜமான அனுக்ஞை, தேவி அனுக்ஞை, விக்நேஸ்வர பூஜை, அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், முதலியன நடைபெற்றன. 16—10—74 புதன்கிழமை காலை கடஸ்தாபனத்திற்குப் பின்னர், சண்டியக்ஞ பூஜை தொடங்கப்பெற்றது. அன்றுமுதல், காலை மாலை இரு வேளைகளிலும் சதசண்டி வேள்வி நடைபெற்றது. 20—10—74 மாலை வில்வவிருக்ஷாபிமந்த்ரணமும், 21—10—74 காலை நவபத்ரிகாக்ரஹணமும், 23—10—74 காலை அஷ்டாதச ஆயுதமண்டல பூஜையும் நடைபெற்றன. 24—10—74 வியாழக்கிழமை காலை சப்தசதி ஹோமம், மகாபூர்ணகுதி தீபாராதனைகளும் மாலையில் யக்ஞாங்க தீபாராதனையும், இரவு யோகினீ மண்டல பூஜையும் நடைபெற்றன. 25—10—74 வெள்ளிக்கிழமை சதசண்டி யக்ஞ பூர்த்தி. காலை ஸ்ரீ துர்காதேவிக்கு யாக கலசாபிஷேகத்துடன் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன.

நவராத்திரிவிழா நாட்களில், ஸ்ரீ துர்காதேவி சந்நிதியில், சுவாசினீ குமாரி வடுபூஜை, சதுர்வேத பாராயணம், துர்கா சூக்த பாராயணம், திருமுறைப் பாராயணம், அபிராமி அந்தாதி பாராயணம். முதலிய பாராயணங்களும் ஸ்ரீ வித்யாசக்ரமாகிய மேருவிற்கு சகஸ்ரநாமார்ச்சனையும், ஸ்ரீ துர்காதேவிக்கு நவசக்தி அர்ச்சனரூபமாக லட்சார்ச்சனையும் நடைபெற்றன,

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் காலை மாலை இரு வேளைகளிலும் எழுந்தருளி சண்டியக்ஞ தீபாராதனை நிகழ்த்துவித்து பக்தர்களுக்குப் பிரசாதம் வழங்கியருளினார்கள்.

நவராத்திரி நாட்களில் மாலை 7 மணிமுதல் 8 மணிவரை, மாயூரம் திரு இராமநாத தீக்ஷிதர் அவர்களால் தேவி பாகவதம் பற்றிய விரிவுரையும், பூர்ணாகுதி வழிபாட்டிற்குப் பின்னர் ஆனந்ததாண்டவபுரம் பிர்மஸ்ரீ இராமதாச ஐயர் அவர்களால் தேவிமாகாத்மியம் பற்றிய விரிவுரையும் நிகழ்த்தப்பெற்றன. வழிபாட்டிற்கு வந்திருந்த அன்பர்கள் பலரும் கேட்டு மகிழ்ந்தனர்.

—o—

ஆதீனக் கல்வி நிலையங்களின்

கலைமகள் விழா

ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி, ஸ்ரீ குருஞான சம்பந்தர் உயர் பள்ளி, பல்கலைக் கல்லூரி, வேதசிவாகம பாடசாலை, தேவாரப் பாடசாலை ஆகிய தருமையாதீனக் கல்வி நிலையங்களின் சார்பில் 16—10—74 புதன்கிழமை முதல் நவராத்திரி விழா, திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் மாலை 3 மணி அளவில் சிறப்பாக நடைபெற்றது. மாயூரம் நகராட்சி ஆணையர், திரு. O. சிவதாணு M. A., B. L., மாயூரம் வழக்கறிஞர், திரு. C. R. குஞ்சிதபாதம் அய்யர் B. A., B. L., மாயூரம் வட்டார வளர்ச்சி அதிகாரி, திரு. V. வேதம் B. A., மாயூரம் திரு. க. கல்யாணம் பிள்ளை M. A., மாயூரம் அ.வ.அ. கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், திரு. தி. வ. காந்திமதிநாதன் M. A., தமிழ் விரிவுரையாளர், திரு. அ. கலியபெருமாள் M.A., தருமையாதீனத் தமிழ்ப் புலவர். திரு. ச. தண்டபாணி தேசிகர், தருமையாதீனத் தமிழ்ப் புலவர். திரு. வி. சா. குருசாமி தேசிகர் ஆகியோர் கலைமகள் விழாவில் கலந்துகொண்டு, நவராத்திரிச் சிறப்பையும் அம்பிகையின் அருள் வரலாறுகளையும் எடுத்துக்கூறி சிறப்புரையாற்றினர்.

தருமையாதீனக் கல்லூரிப் பேராசிரியர்கள், ஸ்ரீ குருஞான சம்பந்தர் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள், வேதசிவாகம பாடசாலை ஆசிரியர்கள், மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்,

திரு. சொ. முத்தையன் M.A., மாயூரம் தேசிய உயர்பள்ளித் தமிழாசிரியர், திரு ஆ. இராமபத்திரன் B.A., நகராட்சி உயர் பள்ளித் தமிழாசிரியர், திரு. S. முத்துக்கிருட்டினன், ஆகியோரும், ஆதீனக் கல்லூரி நான்காமாண்டு மாணவ, மாணவியர்களும் பல தலைப்புக்களில் விரிவுரையாற்றினர்கள். ஆதீனத் தேவார பாடசாலை மாணவர்கள் திருமுறைப் பாடல்கள் பாடினர்கள். நாள்தோறும் ஆதீனக் கல்வி நிலைய ஆசிரியர் மாணவர்களும் மற்றும் பலரும் கலந்துகொண்டு பயன்பேற்றனர்.

—o—

தருமையாதீனத் திருக்கோயில்களில்

நவராத்திரி விழா

திருக் கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக் கோயில்களில் 16–10–74 புதன்கிழமை முதல் தொடங்கி 25–10–74 வெள்ளிக்கிழமை முடிய உள்ள நவராத்திரி விழா நாட்களில் உலக நலங்கருதி ஸ்ரீ அம்பாளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும், அர்ச்சனைகளும், சொற் பொழிவுகளும் நடைபெற்றன.

சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில் திருநிலை நாயகிக்கும், வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ தையல்நாயகிக்கும், திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ தர்மசம்வர்த்தினி அம்பாளுக்கும், திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ பிருகந்நாயகிக்கும், திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ அறம்வளர்த்த நாயகிக்கும், திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ அபிராமி அம்மைக்கும், திருக்குவளை ஸ்ரீ தியாகராஜ சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ வண்டமரும் பூங்குழலம்மைக்கும் நவராத்திரி விழா நாட்களில் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளுடன் நவசக்தி அர்ச்சனை ரூபமாக லக்ஷார்ச்சனை நடைபெற்றது.

ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத் தியாகராஜ சுவாமி தேவஸ்தானம், திருமுல்லைவாசல் ஸ்ரீ முல்லைவனநாத சுவாமி தேவஸ்தானம், குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவர சுவாமி தேவஸ்தானம், பேரளம் ஸ்ரீ சுயம்புநாத சுவாமி தேவஸ்தானம், தலைஞாயிறு

ஸ்ரீ குற்றம்பொறுத்தீசுவரர் திருக்கோயில், குறுக்கை ஸ்ரீ வீரட்டேசுவரர் திருக்கோயில், விளநகர் ஸ்ரீ துறைகாட்டும் வள்ளலார் திருக்கோயில், பறியலூர் ஸ்ரீ வீரட்டேசுவரர் திருக்கோயில், மணக்குடி ஸ்ரீ சுந்தரேசர் திருக்கோயில், கருங்குயில் நாதன் பேட்டை ஸ்ரீ சத்திபுரீசுவரர் திருக்கோயில், மாயூரம் வள்ளலார் கோயில் ஸ்ரீ வதான்யேசுவரர் திருக்கோயில், மாயூரம் ஸ்ரீ காசி விசுவநாத சுவாமி திருக்கோயில், மாயூரம் குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருநின்றியூர் ஸ்ரீ லக்ஷ்மி புரீசுவர சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் நவராத்திரி விழா நாட்களில் ஸ்ரீ அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அர்ச்சனையும் நடைபெற்றன.

நவராத்திரி விழா நாட்களில் ஒவ்வொரு நாள் தருமையாதீனத் திருக்கோயில்கள்தோறும் அம்மையின் சிறப்பையும் அருள் வரலாறுகளையும் விளக்கும் வகையில் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. சென்னை, திருக்கோயில் ஆசிரியர் தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திரு. ந. ரா. முருகவேள் M. A., சென்னை, சயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார், தருமையாதீனத் தமிழ்ப் புலவர் மகாவித்துவான், திரு ச. தண்டபாணி தேசிகர், தருமையாதீனத் தமிழ்ப் புலவர் மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார், திருவாரூர் திரு. ச. சாம்பசிவ முதலியார், B. A., L. T., திருவதிகை திரு. க. சண்முகசுந்தரம் செட்டியார், திருவாரூர் திரு. இரத்தின தேசிகர், திரு S. M. சுந்தரராசன், திருப்பனந்தாள், தருமையாதீனத் தமிழ்ப் புலவர், திரு. கு. சுந்தரமூர்த்தி. M. A., திரு. தா. ம. வெள்ளைவாரணம், திரு மு. சுந்தரேசம் பிள்ளை, திருவையாறு திரு. சுவர்ண காளீசுவரன். மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், திரு. தி. வ. காந்திமதிநாதன் M. A., தமிழ் விரிவுரையாளர் திரு. அ. கலியபெருமாள் M. A., தருமையாதீனத் தமிழ்ப் புலவர் திரு. வி. சா. குருசாமி தேசிகர், தருமையாதீனத் தமிழ்ப் புலவர் திரு வி. சபேசன், திரு. இரா. செல்வக்கணபதி, திருமதி. ப. நீலா, ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளித் தமிழாசிரியர் திரு. கா. ம. கண்ணப்பன் ஆகியோர் நவராத்திரி விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு விரிவுரையாற்றினர். ஆங்காங்கும் அன்பர்கள் பலர் வந்து சொற்பொழிவுகளைக் கேட்டும் ஸ்ரீ அம்பிகையை வழிபட்டும் மகிழ்ந்தார்கள்.

எதிர்காலம்

ஜோதிஷம். திரு. A. இராசமாணிக்கம்
ஆசிரியர்,
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி,
திருப்பனந்தாள்.

(ஸ்ரீ ஆனந்த ஹூ கார்த்திகை மீ 1உ முதல் 30உ முடிய)
(18—11—74 முதல் 15—12—74 முடிய)

	ல	கேது	சனி
குரு			
	ராகு சூ சு சந்	செ பு	

ஸ்ரீ ஆனந்தஹூ கார்த்திகைமீ 1உ ஸ்திரவாரம் சூரிய உதயம் முதல் 27 நாழிகை 35 விநாடிக்கு தைதுலை கரணத்தில் மேஷ லக்கினத்தில் ஸ்ரீ சூரியபகவான் விருச்சிக சங்கிரமணமாக கார்த்திகை மாதப் பிரவேசம் செய்தருளுகிறார். சங்கிரமண வாராதிபதி சனீஸ்வரன் சங்கிரமண லக்கினத்துக்கு 3ல் சுப பலம் பெற்று விளங்குகிறார். இதனால் சகல யந்திர சாதனத் தொழில்களும் தீவிரமாக நடக்கும். இரும்பு நிலக்கரி போன்ற சுரங்கப் பொருள்கள் தேவைக்கேற்றவாறு கிடைத்துவரும். நன்செய் புன்செய் பயிர்கள் செழிக்கவும், மலைகள் வனங்களில் கிடைக்கும் பொருள்கள் விருத்தியாகவும் சர்வ ஜீவரட்சகரான ஸ்ரீ சூரிய பகவான் அனுக்ரகம் செய்தருளுகிறார். சங்கிரமண தேவதை, ராட்சசியாய் வைராக்கிய முகத்துடன் மஞ்சள் ஆடை உடுத்தி கையில் கத்தி ஆயுதத்துடன் கழுதை வாகனத்தின்மீது கிழக்கு

முகமாகப் பயணம் செய்பவளாகிறாள். அத்தேவதையின் திருப்தியாக ஸ்திரி தெய்வங்களுக்கு வாசனாதி திரவியங்கள் அபிஷேகம் செய்து சந்தனம் புனுகு சாத்தி, ரத்தினம் மல்லிகை புஷ்பம் அலங்காரம் செய்து பூசிக்க காலரா போன்ற பெருவாரி நோய்கள் மக்களைப் பீடிக்காது. பசுக்கள், ஸ்திரி ஜனங்களுக்கு ஏற்படுகின்ற நலிவுகள் நீங்கும். சுபிட்சம் உண்டாகும்.

சந்திர கிரகணம்

குறிப்பு :- ஷை கார்த்திகைமீ 14உ (29—11-74) சுக்கிர வாரம் பௌர்ணமி உரோகிணி நக்ஷத்திரம் சம்பவிக்கும் கேது கிரஸ்தபூரண பிசங்கவர்ண ஸோமோபராக புண்ணியகாலம் ஏற்படுகிறது.

மேற்படி கிரகணம்	ஸ்பரிசகாலம்	மாலை	மணி	6-59
,,	நிமீலன காலம்	இரவு	,,	8-05
,,	மத்திய காலம்	,,	,,	8-43
,,	உன்மீலன காலம்	,,	,,	9-22
,,	மோக்ஷ காலம்	,,	,,	10-28

அன்று பகல் முதல் ஜாமத்திற்குமேல் போஜனம் கூடாது, பௌர்ணமி சிரார்த்தம் மறுநாள் - கார்த்திகை 2, 3, 4 பாதங்கள். உரோகிணி, மிருகசீர்ஷம் 1, 2 பாதங்கள், ஹஸ்தம். திருவோண நக்ஷத்திரங்களில் பிறந்தவர்கள் சாந்தி செய்துகொள்ள வேண்டும். பலன் : தாத்ருபர்வமாதலால் பசுக்கள் விருத்தியும் பயிர்கள் விருத்தியுமாகும். மக்கள் க்ஷேமமாகவும் ஆரோக்கிய மாகவும் வாழ்வார்கள்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்ர பலனை நடக்கும். 2க்குரிய சுக்கிரன் கோசார நற்பலஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் பண வசதி சரளமாக இருந்துவரும். அசுவதி, கார்த்திகைக்கு மாத முற்பகுதியிலும் பரணிக்கு இம்மாதம் 13உக்குப் பின்னும் நற்பல நக்ஷத்திரங்களில் சுக்கிரன் சஞ்சரிப்பதால் அக்காலம் மிகுந்த பணச் சேர்க்கையை உண்டுபண்ணும். தைரியஸ்தானாதி பதியாகிய புதன் இம்மாதம் 10உக்குமேல் நற்பலஸ்தானத்தில் வருவதால் திடதைரியமும் லிகித ஒப்பந்தங்களில் தனபிராப்தியும் ஸ்திரமும், இராஜாங்க பிரமுகர்களின் சந்திப்பும், மனமகிழ்ச்சியும் ஏற்படும். இம்மாதம் 20ஆம் தேதிக்குமேல் குரு, சனி

அம்ஸையில் வியம்பெறுவதால் தேவபுண்ணிய காரியங்களிலும் சுபமங்கள வைபவங்களிலும் ஈடுபடுத்தும். தீர்த்தயாத்ராதி பிரயாணங்களை ஏற்படச்செய்யும். வரவேண்டிய பொருள்கள் தாமதிக்கினும் செலவிடவேண்டுவன அவசியமானதும் செய்தே தீரவேண்டுமென்ற நிலைமையிலும் இருக்கும். வழக்கு விவகாரங்களின் சிக்கல் புதன் நிலைமையால் நீங்கும். தொழில் அல்லது உத்தியோகம் நல்ல நிலைமையில் இருந்துவரும்.

2. ரிஷபம் :- கார்த்திகை $\frac{3}{4}$ – உரோகினி – மிருகசீர்ஷம் $\frac{1}{2}$

ரிஷபராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனை நடக்கும். புதனும் சுக்கிரனும் இம்மாதம் நற்பல நக்ஷத்திரங்களில் உலவுவதால் தனவசதி தாராளமாக இருந்துவரும். வாக்குக் கண்டிப்பும் உறுதிப்பாடும் மேன்மையை ஏற்படுத்தும். குடும்பத்தில் மனைவி மைந்தர்களிடையே சடசடப்பாக ஆத்திரப்போக்கும் உடன் அனுசரனைப் போக்குமாக இருக்கும். உடலில் உஷ்ணம் மேலிடுவதால் இருமல், மூலச்சூடு சிரோபாரம் போன்ற நோய் தோன்றி உடன் குணமாகும். துர்க்கா சூக்த ஜெபம் செய்வதால் இவை நீங்கி நலம் தரும். தன் ஸ்திரீக்குக் கர்ப்பக் கோளாறு அல்லது ரத்தாதிக்கம் வந்து உடன் குணமடையும். இம்மாதம் 24 ஆம் தேதிக்குமேல் களத்திர மூலிய வருவாய் ஏற்படும். பந்து மித்திரர்கள் கூடுதலும் மகிழ்ச்சியும் உண்டாக்கும். குரு, சனி அம்சையில் ஒன்று சேர்ந்து லாபத்தில் வருவதால் நற்கிரியை மூலம் ஆதாயத்தை ஏற்படுத்தும். தொழில் அல்லது உத்தியோகத்தில் சிறப்பும் நன்மதிப்பும் ஏற்படும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் $\frac{1}{2}$ – திருவாதிரை – புனர்பூசம் $\frac{3}{4}$

மிதுனராசி 9 பாதங்களும் இம்மாதம் சுபபலனைக் கொடுக்கும். இம்மாத ஆரம்ப முதல் தனவசதி தாராளமாக இருந்து வரும். இம்மாதம் 10 ஆம் தேதிக்கு மேல் எழுத்து மூலமான நன்மைகளை உண்டுபண்ணும். 3, 4க்குரியவர்களின் சஞ்சாரத்தால் சகோதரம், பெற்றோர்களின் மேன்மை ஸ்திரி பெருமையானதாக இருக்கும். வயிற்றில் அஜீர்ணம் அல்லது அம்மானுக்கு ஓர் அரிஷ்டம் காட்டும். ஆயினும் குரு வீட்சணத்தால் நீங்கும். இருணம் நீங்கும். சத்துருத்துவமின்றி சகஸ்யைத்தை ஏற்படுத்தும். இம்மாதம் புத்திரபாக்கியம் ஒன்று ஏற்படுவதற்குரிய கிரகநிலை மிக அழகாக அமைந்துள்ளன. இம்மாதம் 20 ஆம் தேதிக்கு மேல் குரு, சனி அம்சையில் ஒன்று சேர்வதால் அக்காலம் மனைவிக்கு மயக்கம்,

மூர்ச்சை ஏற்பட்டு குணமாகும். தொழில் அல்லது உத்தியோகத்தில் உழைப்பு அதிகமாயினும் மிக உயர்ந்த அந்தஸ்தை ஏற்படுத்தும்.

4. கடகம் :- புனர்பூசம் $\frac{1}{4}$ - பூசம் - ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனை இருக்கும். 2க்குரிய சூரியன் நிலையால் எதிர்பாராத செலவினங்கள் நேரும். புதன், சுக்கிரன் சஞ்சாரத்தால் பழைய கடன், வட்டி, வாடகை, குத்தகைப்பணம் முதலியவை வந்து சேரும். மாத முற்பகுதியில் பூமி சம்பந்தமான பொருள் சேர்க்கை ஏற்படும். ஆயினும் அரசாங்க நிர்ப்பந்தங்களும் உடன் அனுகூல நன்மைகளும் ஏற்படுவதாகும். கல்வித்துறையில் பிரசித்தமான நிலைமையும் அதனல் சந்துஷ்டியும் ஏற்படும். இம்மாதம் 10உ முதல் 17உ வரையில் உள்ள காலத்தில் நெஞ்சுவலி போன்ற சிறு தொல்லைகள் வந்து நீங்கும். இம்மாதம் 20உக்கு மேல் தொழிலாளர் சிப்பந்திகளால் இருந்துவந்த அல்லல் பிரச்சனை தீர்க்க முடிவு ஏற்படும். பந்து மித்திரர் சமூகத்தினர் போற்றுதல் ஏற்படும். பஞ்சம இராகுவால் ஸ்தலங்கள் தேவாலயங்கள் செல்லும் வாய்ப்புகளை உண்டாக்கும். குருவின் அம்சை பலனல் மறைமுக சத்துருக்களின் முணுமுணுப்புகள் பற்றி செய்தி தெரியும். கிரியை ஸ்தானதிபதியின் நிலையால் சில காரியங்களை அவசரமாக நடத்தும்படி இருக்கும். தொழில் அல்லது உத்தியோகம் சிறந்தே விளங்கும்.

5 சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி 9 பாதங்களும் இம்மாதம் நற்பலனைத்தரும். 2க்குரிய புதன் 3ல் இருந்தாலும் அதன் நற்பல ஸ்தானத்தில் வேறு கிரகம் இருப்பதால் மிகுந்த தனவசதியும் பூமி மூலமான வருவாய்களும் சிறப்பாக இருந்துவரும். சகோதரர்களுடைய பொருளாதார நலன்கள் திருப்திகரமாக இருந்துவரும். வீடு வாகனத்தின் ஆக்கத்தை விருத்தி செய்யும். ஆயினும், இம்மாதம் 18உக்கு மேல் வாகனத்தில் ஓர் செலவு நேரும். இம்மாதம் 20உக்கு மேல் குரு சனி அம்சையில் ஒன்று சேர்வதால் புத்திரர் களத்திரம் இவர்களுக்கு உடற்பீடையும் உடன் நிவர்த்தியும் ஆகும். வேலைக்காரர், சிப்பந்திகள், தொழிலாளிகளின் நலன்களுக்காக ஈடுபடுவதில் சிரமமாகத்தோன்றினும் முடிவில் நன்மையாகவே ஆகும். கர்ம தர்மாதிபதிகளின் நிலையால் தொழிலில் புதிய முயற்சியும் ஆதாயமும் ஏற்படும். தொழில் எத்தகையதாயினும் வளம் பெற்று விளங்கும். உத்தியோகத்தில் உயர் பதவிக்குரிய சகாயங்களும் கைகூடுதலுமாகும்.

6. கன்னி :- உத்திரம் $\frac{3}{4}$ – ஹஸ்தம் – சித்திரை $\frac{1}{2}$

கன்னியா ராசி 9 பாதங்களும் இம்மாதம் நற்பலன்களாக நடக்கும். 2க்குரிய சுக்கிரன் கோசார நற்பலஸ்தானத்தில் உலவுவதால் செலவுகளுக்கு ஏற்ப, தாராளமாக பணவசதி உண்டாகும். வரவேண்டிய வட்டி, வாடகை, குத்தகைப்பணம் முதலியவை சிரமமின்றி இம்மாதம் வரவு ஆகும். சகோதரர்களின் குடும்பம் சிறந்து விளங்கும். பெற்றோர்களுக்கு ஏற்பட்ட மனச் சோர்வு தெய்வானுக்ரகத்தால் நீங்கி, சகல நன்மைகளும் மன நிம்மதியும் ஏற்படும். தற்காலம் சனீஸ்வரனுக்கு எள்ளுப் பொட்டலம் தீபம் ஏற்றியும் ஸ்ரீ சுப்ரமணிய சுவாமிக்கு அர்ச்சனையும் செய்வதால் கணவன் மனைவியின் மனக்கஷ்டம் நிவர்த்தியாகும். தர்மகர்மாதிபதிகளின் சஞ்சாரத்தால் செய் தொழில் அல்லது உத்தியோகத்தில் இடைஞ்சல் செய்வோர் ஒருபுறம் இருப்பினும் கற்ற கல்வியின் சிறப்பாலும், தொழில் அனுபவத் திறமையாலும், பிரபலஸ்தர் அனுசரணை ஒத்தாசைகளாலும் நற்பயனைப்பெற ஏதுவாகும்.

7. துலாம் :- சித்திரை $\frac{1}{2}$ – சுவாதி – விசாகம் $\frac{3}{4}$

துலா ராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிரமான பலனைத் தரும். 2க்குரிய குஜன் பாக்கியாதிபதியுடன் சேர்ந்த விசேஷத்தால் தனவசதி தாராளமாக இருக்கும். செந்நெல் வரவு திருப்திகரமாக இருக்கும். வட்டி, வாடகை முதலியவை வந்துசேரும். மனைவியின் பெயரால் மூலதனங்கள் ஏற்படும். மூன்றும் இடத்தைச் சனி பார்த்து 3க்குரிய குரு 5ல் இருப்பதால் சகோதரர்களின் குடும்ப நலம் மிச்சிரமானதாக இருக்கும். ஆண்டுக் கோள்களாகிய குரு, சனி இவர்களின் நிலையால் வீடு புத்திரர்களின் பாக்கியம் சிறப்பானதாக இருக்கும். இம்மாதம் 20ஆம் தேதிக்குமேல் கொடுத்தல் வாங்குதலில் ஓர் சச்சரவு வந்து நீங்கும். குடும்பத்தில் தகாத வர்த்தைகள் பிறர் கூறுவதால் மனப் பொல்லாப்புகள் ஏற்படச் செய்யும். மனைவிக்கு ஜுரம், மயக்கம் போன்ற தொல்லைகள் ஏற்படினும் உடன் குணமாகும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் கடமைப்பணி குறைவின்றி நடைபெறும்.

8. விருச்சிகம் :- விசாகம் $\frac{1}{4}$ – அனுஷம் – கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். 2-க்குரிய குரு மிச்சிரனாக இருப்பதால் பணவசதிகள் இருந்தும் தக்க வழியில் பயன்படுத்த இயலாமல் இருந்துவரும். மனசில் சந்தோஷம் போன்ற பாவனையும் அசட்டுச் சிரிப்பு முகத்தில்

காணுதலுமாகத்தான் இருக்கும். 3, 4-க்குரிய சனி நிலையால் சகோதரர் தாயார் இவர்கள் சம்பந்தமாகக் கவலையும் கடமையுணர்வும் ஏற்படும். வீடு, வாகனம் இவற்றின் ஆக்கம் முதலியவற்றில் சிரமமாகவும் சுமையாகவும் இருந்தவை நீங்க குரு சகாயம் செய்துவருகிறார். 7-க்குரிய சுக்கிரன் நிலைமையால் விவாக சுக சௌக்கிய பலன் ஏற்படும். கௌரவம் விருந்து உபசாரங்கள் எதிர்பாராத அளவில் நடைபெறும். இம்மாத முற்பகுதியில் மனோவேகம் பொருளிழப்பு முதலியன ஏற்படினும் கண்யத்துடன் ஆகும். பிற்பகுதியில் ஆதாய சௌக்கியத்தையளிக்கும். கல்வி தொழில் முதலியவற்றில் சாதா சூழ்நிலை ஏற்படும். கடமைப் பணி நன்கு நடைபெறும்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர் ராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிரபலனை நடக்கும். 2-க்குரிய சனி மிச்சிரனை இருப்பதால் தனவசதி சீராக இருக்கும். இம்மாதம் முற்பகுதியில் புத்திரன் களத்திரம் முதலியோராலும், போக்கிய வஸ்துக்களின் பிராப்தியாலும் ஆதாயமும் மகிழ்ச்சியும் ஏற்படும். சகோதரர்களின் முன்னேற்ற நிலைமை திருப்திகரமாக இருக்கும். திடதைரியமும் பிரபலஸ்தர்களால் நன்மையும் இருந்துவரும். இம்மாத பிற்பகுதியில் புத்திர களத்திர சம்பந்தமாக அதிக பொருட் செலவை உண்டுபண்ணும். இம் மாதம் 17வக்குப் பிறகு சகோதரத்துக்கு ஓர் விபத்து ஏற்பட்டு நீங்கும். வழக்கு விவகாரங்களில் முடிவற்ற நிலையாக இருக்கும். தொழில் துறையில் இம்மாதம் பிற்பகுதியில் நஷ்டம் காட்டும். உத்தியோகத்தில் வெறுப்பு விருப்பின்றி கடமைப்பணி நன்கு நடந்துவரும்.

10. மகரம் :- உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் இம்மாதம் சாதாரண பலனைக இருக்கும். 2க்குரிய சனி நிலையால் தேவைக்கேற்றவாறு பண வசதி நன்கமையும். வரவேண்டிய பழைய பாக்கிகள் வந்துசேரும். புதிய வருமானங்களும் உண்டாகும். கல்வித்துறையில், தொழிலில் முன்னேற மார்க்கம் ஏற்படும். மாத பிற்பகுதியில் சச்சரவான நிலைமையாய் இருப்பினும் சரிக்கட்டுதலும் சமாளித்தலுமாகும். சகோதரர் குடும்பம் சங்கடநிலைமையி லிருப்பினும் அரசாங்கத்தால் சில நன்மைகள் ஏற்படுகின்ற காரணத்தால் நீங்கும். 4, 5க்குரியவர்களின் நிலையால் இம்மாதம் சுகானுபவங்களும் குடும்பத்தில் விவாகாதி சுபகாரியங்களும்

ஏற்படும். இம்மாதம் புத்திர மகவு ஏற்படுவதற்குரிய கிரகநிலை மிகவும் அழகாக உள்ளது. இந்த ராசிக்கு சத்துருக்களாக உள்ளவர்களும் வலுவில் வந்து நேசமாவார்கள். தொழில் அல்லது உத்தியோகத்தில் உயர்ந்த மதிப்பும், பதவி உயர்வும் ஏற்படும். உபத்தொழில் மூலமாக வருமானம் அதிகமாக வந்துசேரும்.

11. கும்பம் :- அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾

கும்ப ராசி 9 பாதங்களும் இம்மாதம் நற்பலனைக் கொடுக்கும். 2க்குரிய குரு இம்மாதம் சுயாங்கிசம் பெறுவதால் தன வசதி தாராளமாக இருந்துவரும். 3க்குரிய செவ்வாய் 9ல் புதனுடன் சேர்ந்திருப்பதால் சகோதரருக்கு நிர்ப்பந்த அல்லல்கள் ஒருபுறம் இருப்பினும் குரு வீட்சணத்தால் மேலோர் சகாயங்களும் பல பெரு மதிப்புகளும் பெற ஏதுவாகும். 4க்குரிய சுக்கிரன் நிலையால் வீடு, வாகனத்தில் புதிய மாறுதல்கள் ஏற்பட சந்தர்ப்பங்கள் உண்டாகும். புதன் நிலைமையால் புத்திரர்களின் கோபம், பிடிவாதம் இவற்றில் மனச் சங்கடமாக இருக்கும். கணவன் மனைவியின் வாழ்க்கை ஒற்றுமையாக இருந்துவரும். இம்மாதம் 17உ வரையில் அலைச்சலும் மனோதைரியமாக எதிலும் ஈடுபடுதல் முதலியன நேரும். அதிலும் 10ஆம் தேதி முதற் கொண்டே காரியானுகூலத்தையும் வெற்றியையும் ஏற்படுத்தி விடும். தொழில் அல்லது உத்தியோகத்தில் சிறப்பும் இஷ்ட காரிய சித்தியும், அரசாங்க காரிய பிரபல்யமும் ஏற்படும்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி

மீன ராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். 2க்குரிய செவ்வாய் மிச்சிரனாக இருப்பதால் செலவினங்கள் அதிகமாகும். அதேசமயம் பலவழியில் நல்ல வருமானமும் ஏற்படும். 3க்குரிய சுக்கிரன் நிலையால் சகோதரர் குடும்ப நலம் சிறப்பாக இருக்கும் 4. 7க்குரிய புதன் நிலையால் வீடு, வாகன பிராப்தியையும், மனைவி சௌக்கியத்தையும் மனமகிழ்ச்சியையும் ஏற்படுத்தும். புத்திரர், புத்திரிகளின் நலம் குறித்து ஓர் செலவு நேரும். வீட்டில் சுப காரியங்கள் மங்களகரமாக நடைபெறும். நிதி நிலைமையில் ஓர் சிக்கலும் பூசலுமான நிலையிருந்து நீங்கச் செய்யும். விவசாயத்தில் சாதாரண பலனாக இருக்கும். தொழில் அல்லது உத்தியோகத்தில் உழைப்பு அதிகரிக்கும். இராசாங்கம் அல்லது பிரபலஸ்தர்களின் விசுவாச அபிமானங் களைப்பெற சந்தர்ப்பம் ஏற்படும். ஓர் ஸ்தலம், தீர்த்தயாத்திரை செய்ய நேரும்.

செய்திகள் : பக்கம் 605 இன் தொடர்ச்சி

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி மூன்றாவது ஆண்டுக்

குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தின் 25 ஆவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருந்து 26 ஆண்டுகள் அருளாட்சி செய்தருளிய ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தருமையாதீன வரலாற்றில் பொற்காலங் கண்டவர்கள். அவர்கள், திருவருள் அழைப்பின் உணர்வால் 58 ஆவது பிறந்தநாளைக் காசியம்பதியில் கொண்டாட விழைந்து அன்பர்களுடன் காசியம்பதியை அடைந்த சில மணி நேரத்தில் 'முத்தையா' என்ற திருநாமத்தை உச்சரித்தவண்ணம் 10—11—74 இல் விசுவேசன் திருவடி நிழலில் கலந்தருளினார்கள். அவர்கள் பரிபூரணமடைந்த மூன்றாவது ஆண்டுக் குருபூஜை விழா, தருமையாதீனம் 26 ஆவது குருமகா சந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி குருமூர்த்த ஆலயத்தில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் 7—11—74 வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். மாலையில் "திரு அருட் செய்தி" (ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் அருளாசித் தொகுதி) என்ற நூல் விழா மலராக வெளியிடப்பெற்றது. திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் வித்துவான், ஸ்ரீமத். காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் விழா மலரை வெளியிட்டார்கள். செந்தமிழ்ச் செல்வர், திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ., அவர்கள் விழா மலர் வெளியீட்டுரையை நிகழ்த்தினார்கள்.

அன்று காலை, வழிபாட்டிற்குப் பின்னர் சமயவிரிவுரைகள் நிகழ்ந்தன. வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள், தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திரு. வி. சா. குருசாமி தேசிகர், வித்துவான் திருமதி. ப. நீலா ஆகியோர் முறையே சொக்கநாத வெண்பா, சிவபோக சாரம், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி, பண்டார மும்மணிக் கோவை என்ற தலைப்புக்களில் விரிவுரையாற்றினர். மாலை 6 மணி அளவில் சீகாழி, திரு S. திருஞானசம்பந்தம், திருச்சி, திரு. S. முத்துக்கந்தசாமி குழுவினரால் திருமுறை இன்னிசையரங்கும், மாலை வழிபாட்டிற்குப் பின்னர், தருமையாதீனப் பண்ணிசைப் புலவர், தருமபுரம், திரு. பி. சுவாமிநாதன் குழுவினரால், "குருஞான சம்பந்தரும் கயிலைக் குருமணியும்" என்ற தலைப்பில் நாமாவளிக் கதையும் நிகழ்த்தப்பெற்றன. பக்தர்கள் பலர் வந்து வழிபட்டுப் பிரசாதம் பெற்றும் குருவருள் பெற்றும், சொற்பொழிவுகளைக் கேட்டும் மகிழ்ந்தனர்.

மாயூரம், தெய்வத்தமிழ் மன்றத்தில்
தருமையாதீனம்
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி நினைவு விழா

தருமையாதீனத்தில் 25 ஆவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருந்து, சைவமும், தமிழும் தழைக்க எண்ணற்ற அறப்பணிகள் இயற்றி, கயிலை கண்டு கனகாபிஷேகம் கொண்டு, காசியம்பதியில் பரிபூரணம் எய்திய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் மூன்றுமாண்டு நிறைவு நினைவு விழா, மாயூரம் தெய்வத்தமிழ் மன்றத்தின் சார்பில் திருஇந்தளூர், ஏ. வி. சி. புதிய திருமணக் கூடத்தில் 6, 7—11—74 புதன், வியாழன் ஆகிய இரு நாட்களிலும் சாத்திர தோத்திரத் திருநாட்களாக நிகழ்ந்தது. விழாவைத் தருமையாதீனம் 26 ஆவது குருமகா சந்நிதானம் அவர்கள் தொடங்கி வைத்து அருளாசி வழங்கினார்கள்.

விழாவிற்குத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் மாலை 7 மணி அளவில் எழுந்தருளினார்கள். மாயூரம் தெய்வத்தமிழ் மன்றத்தினரும் பக்தர்களும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களை, நாதசுர இன்னிசை முழங்க, பூர்ண கும்ப மரியாதைகளுடன் வரவேற்று வணங்கி மகிழ்ந்தார்கள். இறை வணக்கத்துடன் விழா தொடங்கியது. தெய்வத் தமிழ் மன்றத்தின் தலைவர். திரு. ச. மகாதேவன் அவர்கள் விழாவிற்கு வந்திருந்தோர் அனைவரையும் வரவேற்றார்கள். டாக்டர். திரு. மு. சுவாமிநாதன், M.B., B.S. அவர்கள் கவிதை வடிவில் அமைந்த வரவேற்புரை ஒன்றை வாசித்து ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திருவடி மலர்களில் சமர்ப்பித்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்து ஆசியுரை வழங்கியருளினார்கள். இரண்டாம் நாள் விழாவை சிதம்பரம், அறப்பணிச் செல்வர், டாக்டர். திரு. கே. அரங்கசாமி பிள்ளை எம். பி., பி. எஸ்., அவர்கள் தொடங்கிவைத்து உரையாற்றினார்கள். தோத்திரத்தில் திருஞானசம்பந்தர் அருளிய திருமுறைகளும், சாத்திரத்தில் மெய்கண்டார் அருளிய சிவஞானபோதமும் இவ்வாண்டு நினைவு விழாவிற்குரிய பொருளாக அமைந்தன. இரண்டு நாள் விழாவிலும் முறையே, "ஞானசம்பந்தர் தேவாரத்தில் இலக்கிய நுட்பம்" "ஞானசம்பந்தர் அறிவுறுத்தும் சமுதாய நன்மைகள்" என்ற தலைப்புக்களில் செந்தமிழ்ச் செல்வர். திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ., அவர்கள் விரிவுரையாற்றினார்கள். தருமையாதீனத் தமிழ்ப் புலவர். டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பி. எச்டி., அவர்கள் சிவஞான போதத்தில்—பொது இயல், உண்மை இயல்களைப்பற்றி விரிவுரையாற்றினார்கள். தெய்வத் தமிழ் மன்றத்தின் செயலர் திரு. R. இராசசேகரன், B. Sc., B. L. அவர்கள் நன்றி நவில, நாட்டு வாழ்த்துடன் விழா இனிது நிறைவெய்திற்று.